
# தொழிலாளி

இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 இதழ் 36 | மே, 16, 1964 | பக்கங்கள் 8 | விலை சதம் 10


**இடதுசாரி ஐக்கிய முன்னணி இன்று இருக்கின்றதா? இக்கேள்வியை இன்று இடதுசாரி இயக்கத்தில் உள்ளவர் அனைவரும் எழுப்புகின்றனர். இக்கேள்வி எழுவதற்கான பல சம்பவங்கள் நாட்டில் நடைபெற்றது யாவரும் அறிந்ததே.**



எச். பி. அமரபால
வாலிபர் சம்மேளனத் தலைவர்

# இடதுசாரி ஐக்கிய முன்னணி எங்கே?

## நாம் கூறுவது சரியா? தப்பா?


(பதுளை வாலிபர் கருத்தரங்க மலர், பக்கங்கள் 7, 8)


சென்ற வாரம் நடைபெற்ற இலங்கை சமசமாஜக் கட்சி மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில், தமது கட்சி மாத்திரம் கூட்டரசாங்கத்தில் சேர வேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்த டாக்டர் என். எம். பெரேரா, ''இடதுசாரி ஐக்கிய முன்னணி எங்கே இருக்கிறது'' என்ற கேள்வியை எழுப்பி அம் முன்னணி தற்பொழுது இல்லை எனப் பதிலிறுத்துள்ளார் என அறியப்படுகின்றது. தமது மத்திய கமிட்டியில் இக்கருத்தை என். எம். முன்வைத்தது இரண்டாவது முறை எனவும் அறியப்படுகின்றது.

மறைவில் நடைபெற்ற இப் பேச்சின் உண்மை பொய் எப்படியிருந்தாலும், பகிரங்கத்தில் நடைபெற்ற சம்பவங்களை நாம் பார்ப்போம். கூட்டரசாங்கம்பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்த, முன்னணிக்குத் தெரியாமலே முதலில் பிலிப் குணவர்த்தனவும் பின்னர் என். எம். பெரேராவும் சென்றனர். இவர்கள் இருவரும் முன்னணியைக் கலந்தாலோசிக்கவும் இல்லை; அதைப்பற்றிக் கவலைப்படவுமில்லை.

இதற்குப் பின்னர் திருவாளர்கள் சீ. பி. டி. சில்வாவையும், மைத்திரிபால சேனநாயக்காவையும் மந்திரி சபையிலிருந்து நீக்கவேண்டுமென்ற கோரிக்கையைத் தான் நினைத்தவாறே பிலிப் முன்வைத்தார். இதுபற்றி ஐக்கிய முன்னணியை அவர் கேட்கவுமில்லை; அனுமதி பெறவுமில்லை. அதேபோல் என். எம். பெரேராவும் முன்னணிக்கு எதுவித முன்னறிவித்தலும் கொடாமலே, நுவரெலியாவில் கிரிக்கெட் அடித்துப் பிரதமருடன் கூட்டரசாங்கத்திற்கான தமது விதிகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பொழுது சமசமாஜக் கட்சி மட்டும் கூட்டரசாங்கத்தில் சேரவேண்டுமெனத் தமது கட்சியின்மத்தியக்கமிட்டியில்என். எம். கூறியுள்ளார்.

இவற்றின் மத்தியில் கூட்டரசாங்கத்தில் தமக்கும் இடம் இடைக்கும் என நாக்கில் ஜலம் வழியக் காத்திருந்த விக்ரமசிங்க - கெனமன் கும்பல் ஒன்றும் சரிவராது போகவே ஐக்கிய முன்னணி ஒன்ருகச் செயல்பட வேண்டும்' எனப் போலிக் குரல் எழுப்புகின்றனர்.

இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது தனியன் தனியனுகவும், கூட்டம் கூட்டமாகவும், பதவி வெறிபிடித்து ஓடித்திரிந்தவர்கள் தமது ஆசைகள் சுலபமாக நிறைவேருததைக் கண்டதும் ஐக்கியம் பேசுகின்றனர். இப்போலி ஐக்கியம் எவ்வளவு காலம் நிலைக்கும்?

இச்சம்பவங்கள் ஐக்கிய முன்னணி பற்றி நாம் கூறியவையனைத்தும் சரியென நிரூபித்துள்ளன. சந்தர்ப்பவாத தேர்தல் முன்னணியாக இடதுசாரி முன்னணி இருக்குமட்டும் அதன் ஆயுள் குறுகியதெனவும், அதனுல் மக்களுக்கு எதுவித நன்மையும் கிடையா


—8-ம் பக்கம் பார்க்க




தோழர் எச்.எம்.பி. முஹிதீன்

## ஆசிரியர் இலங்கை திரும்புகிருர்!

சென்ற ஒன்றரை மாத காலமாகத் தொழிலாளி ஆசிரியர் தோழர் எச். எம். பி. மொஹிதீன் பல வெளிநாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார். ஆசிய ஆபிரிக்க ஐக்கியத்துவக் கமிட்டி, இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஆகியவற்றின் சார்பாக புரட்சிகரப் பணிகளை நிறைவேற்ற வெளிநாடு சென்ற தோழர் மொஹிதீன் இக் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளார் என அறியப்படுகின்றது.

அல்ஜீரியா, அல்பேனியா முதல் பல ஆபிரிக்க நாடுகளுக்கும் சூருவளிப் பிரயாணம் செய்த தோழர் மொஹிதீன் பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதிகளின் காரியதரிசியாக இக் காலகட்டத்தில் கடமையாற்றியுள்ளார். ஆபிரிக்க நாடுகளின் புரட்சிகர நிலைமைகளை நன்கு கற்றுக் கொள்வதில் தோழர் மொஹிதீன் ஈடுபட்டுள்ளார்.

தற்பொழுது அல்பேனியாவின் தலைநகரான ரிருஞவில் சுகவீனம் காரணமாக வைத்தியம் செய்து கொண்டிருக்கும் தோழர் மொஹிதீன் அடுத்தவாரம் இலங்கை திரும்புவாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

# மாக்சிஸ ஒளிவிளக்கை ஏந்துவோம்!

தலையங்கம்

இலங்கை மாக்சிஸ போதனைக்குழு விரைவில் மாக்சிஸ சொற்பொழிவுத் தொடரை ஒழுங்குபடுத்தவிருக்கின்றது. வர்க்க உணர்வு கொண்ட அரசியல் அறிவு விழையும் தொழிலாளர்கட்கும், புரட்சிப் போக்குக்கொண்ட வாலிபர்களுக்கும் மாக்சிஸ அறிவு பெற்றுக் கொள்வதற்கு இது அரியதோர் சந்தர்ப்பமாகும். மாக்சிஸத்தின் உண்மை மாணவர்கள் அனைவரும் இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தத் தவறமாட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாத, வாய்வேதாந்தத் தலைவர்கள் மாக்சிஸக் கோட்பாடுகளைக் கைவிட்டு, கொள்கைகளை மறந்து தொழிலாள வர்க்க இயக்கத்துக்குத் துரோகம் செய்த வேளையில் தொழிலாளர்கட்கும் குறிப்பாகக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்களுக்கும் சரியான மாக்சிஸ போதம் அளிக்கும் அரும்பணியை இலங்கை மாக்சிஸ போதனைக் குழு நிறைவேற்றியது. கம்யூனிஸ்ட் தலைவர்கள் என்ற பெயரில் பவனிவந்தவர்கள் கொள்கைகள் அனைத்தையும் காற்றில் பறக்கவிட்டு, தனிப்பட்ட அவதூறுகளிலும், வகுப்புவாதப் பிரச்சாரத்திலும் ஈடுபட்ட வேளையில் தொழிலாளர்கட்கு மாக்சிஸ அடிப்படைக் கண்ணேட்டத்தை அளித்தது இலங்கை மாக்சிஸ போதனைக் குழு.

சென்ற ஆண்டு மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை மாக்சிஸ போதனைக் குழு தொழிலாளர்கட்கும் கட்சித் தோழர்கட்கும் மாக்சிஸத் தத்துவ அறிவை, லெனினின் கொள்கைகளைப் பரப்புவதையே தனதுபணியாகக் கொண்டது. ஆனல் திரிபுவாதத் தலைமைக்கு இதைச் சகிக்கமுடியவில்லை. இக்குழுவின் நடவடிக்கைகளை நசுக்கிவிடப் பலவித சதி வேலைகளிலும் ஈடுபட்டது.

தொழிலாளர்களும் மற்றும் தோழர்களும் இக் குழு மூலம் சரியான மாக்சிஸ போதம் பெறுவதைக் கண்டதும், தமது ஏமாற்று வியாபாரத்துக்குப் பேராபயமெனக் கண்ட அவர்கள் இம் மாக்சிஸ போதனைக் குழுவை ஒழுங்குபடுத்துவதில் முன் நின்றுழைத்த தோழர்களைப் பல வழிகளிலும் மிரட்டினர்; ஹிட்லர் பாசன் விசாரணைகள் நடாத்தினர்; குழச் சொற்பொழிவுகளில் கலந்துகொண்ட எண்ணற்ற தோழர்களைக் கடும் சோதனைக்குள்ளாக்கினர். மாக்சிஸம் கற்பது தவறென இப்போதனைக் குழுவுக்கெதிராகப் பலவித நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். சீனக் கண்ணேட்டத்தைத் தோழர்கள் படிக்கக்கூடாது என்ற பயந்தாங்கொள்ளித் தீர்மானம் எடுத்த இவர்கள் மாக்சிஸ போதனைக் குழுவை எதிர்த்ததில் ஆச்சரியமில்லை.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாதத்தை எதிர்த்த சென்ற வருட வெற்றிகரப் போராட்டத்தில் இலங்கை மாக்சிஸ போதனைக் குழு சரித்திர முக்கியம் மிகுபங்கு வகித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. வர்க்க நலன்களைக் காட்டிக்கொடுப்பதை எதிர்த்துத் தொழிலாளர்களின் கண்களைத் தத்துவரீதியில் திறந்துவிட்ட பெருமையும் இலங்கை மாக்சிஸ போதனைக் குழுவுக்கே சாரும்.

இன்று எதுவித கட்டுப்பாடும், பயமுறுத்தல் விசாரணைகளும் இல்லாத சுதந்திர நிலையில் மாக்சிஸ போதனைக் குழு திரும்பவும் தனது பணியை ஆரம்பிக்கின்றது. மாக்சிஸ அறிவு பெற விழையும் அனைவரும் கலந்துகொள்ளக்கூடிய இக்குழுவின் சொற்பொழிவுகளை மும்மொழிகளிலும் நடாத்த ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

மாநிலத்தின் ஒளிவிளக்கான மாக்சிஸ அறிவுபெற விரும்பும் முற்போக்கு எண்ணம்கொண்ட அனைவரையும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உண்மையான தத்துவ ரீதியான அறிவைப் பெறுமாறு நாம் அன்புடன் அழைக்கின்ரேம்.

# பாரதிதாசனின் இலக்கிய வாழ்வு

கனக சுப்புரத்தினம் மறைந்துவிட்டார். பாரதிதாசனாக ஆரம்பித்து, உலகப் பொதுமை பேசி, தமிழ் நாட்டின் சீர் திருத்தம் பேசிப், பின்னர் தமிழர் முன்னேற்றம் பேசி, அதற்காகப் பிராமண எதிர்ப்புப் பேசி, இடைக்கிடை திராவிடத்தைப் பற்றியும் பேசி (ஆனல் திராவிடக் கவிஞராகவே போற்றப்பட்டு) வந்த கவிஞரின் பூதவுடல் மறைந்துவிட்டது. கவிஞர்களின் புகழுடம்பு என்றும் மறைவதில்லை. மகாகவி செகசிற்பியார் தனது கவிதையொன்றிற் கூறியுள்ளது போன்று, கவிதைவாழும் வரை கவிஞனும் வாழ்வான். ஆனல் கவிஞனைப் பற்றிய நினைவு என்றென்றும் சரியானதாக, அக்கவிஞனது அந்தரங்க உணர்விற்கு ஒத்ததாக இருக்குமா என்பது கேள்வி. அதுவும் தமிழ் நாட்டில் இப் பிரச்சினை மிக மிக முக்கியமானது, ஏனெனில் பாட்டென்று இருப்பது எல்லாம் ரசிக்கப்படுவதற்கே என்ற ரசிக விமர்சன நோக்குள்ள தமிழ் நாட்டில் கவிதையில் மேலெழுந்தவாரியாகக் காணப்படும் பொருளை மாத்திரம் ரசிப்பதே வழக்கமல்லாது, கவிஞனது சொந்த வாழ்க்கையையும் அவனது ஆக்கங்களையும் இணைத்துப் பார்த்து விமர்சிக்கும் வழக்கம் இல்லை. இதனல் கவிதைகளை மாத்திரமே நாமறிவோமல்லாது கவிஞனை அறிவதில்லை. கம்பராமாயணத்தைப் புகழ்வதையே தொழிலாகக் கொண்டவர்களில் எத்தனை பேருக்கு கம்பன் கவிதைகளை அவன் காலப் பின்னணியில் வைத்துப் பார்க்கத் தெரியும். பாரதி தாசனும் அவ்வாறு தவருக விளங்கப்படுபவர்,

இறந்தவர்கள் யாவரும் கௌரவத்திற்குரியவர் என்ற மரியாதையுணர்வை விட்டுப் பாரதிதாசனை ஆராய்தல் அவசியம்.

பாரதிதாசன் முதலில் பாரதியாரின் தாசனுகவே கவிதைத் துறையில் இறங்கினரெனினும் அவர் வெகு விரைவில் தமிழியக்கத்தில் சேர்ந்துகொண்டார். அகில இந்திய அடிப்படையில் சுதந்திரத்திற்காக இந்தியர்கள் யாவரும் ஒருங்கு சேர்ந்து போராடிய அக் காலத்தில், தமிழினத்திடையே காணப்பட்ட குறைபாடுகள் நீங்க வேண்டுமென்று பாடியவர் பாரதியார். தமிழரின் முன்னேற்றமே அகிலஇந்திய முன்னேற்றத்திற்கென்ற இலட்சியத்தைப் பற்றியதிகம் சிந்திக்காது தமிழரின். முன்னேற்றமே முக்கியம் எனப் பாடியவர் பாரதிதாசன். அவரது முதலாவது கவிதைத் தொகுதி வெளிவந்த காலத்தில் (1940க்கு முன்னர்) அவர் கொண்டிருந்த கருத்து முக்கியமானது.

தமிழர் முன்னேற்றம் அவசியம் என்றும் அதற்கு அடுத்த படியாக இருந்த சமூக வழக்கங்களான குழந்தை மணம் விதவைக் கொடுமை முதலியவற்றை அழிக்கவேண்டுமென்றும் பாடிய அவர், அத்தகைய முன்னேற்றத்தினுல் பொது உடமைப் பண்பு நிறுவப்பட வேண்டுமெனப் பாடினுர்.

புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட<br>
போரிடும் உலகத்தை வேரோடுசாய்ப்போம்(புதிய)<br>
பொது உடமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்<br>
புனித மோடதை எங்கள் உயிரென்று காப்போம் (புதிய)<br>
உணர்வென்னும் கனலிடை அயர்வினை எரிப்போம்<br>
ஒரு பொருள் தனி எனும் மனிதரைச் சிரிப்போம் (புதிய)

முதலாம் கவிதைத் தொகுதியில் தான் காண விரும்பும் புதிய உலகு எத்தகையது என்பதனைப் பாரதிதாசன் காட்டுகிருர். மானிடம் எனும் பண்பு கொண்ட தாய், விரிந்த மனமுடைய மனிதர்களைக் கொண்ட தாய், தொழிலாளரைக் கௌரவிப்பதாய், அறிவுக் கண்கொண்டே எதையும் ஆராய்வதாய், சாதி, சமயம் முதலிய மூட வழக்கங்கள் அற்றதாயுள்ள புதிய உலகினையே தன் இலட்சியமாகக் கொண்டார் பாரதிதாசன்.

தொழிலாளர் நிலை அவர் கவனத்தைப் பெரிதுங் கவர்ந்திருந்தது. ''நீங்களே சொல்லுங்கள்'' என்னுங் கவிதையில் அழகு பொலியும் இடங்களைப் பார்க்கும் பொழுது (பூஞ்சோலை, நெடும்பாதை, நன்னிலம்) அவற்றினை அந்நிலைக்குக் கொணர்ந்த தொழிலாளர்களையே பாரதிதாசன் காண்கிருர்.

சித்திரச் சோலைகளே! உமை நன்கு<br>
திருத்த இப் பாரினிலே—முன்னர்<br>
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ! உங்கள் வேரினிலே!

மேலும் அக்காலத்தில் அவர் சமூகத்திலுள்ள குறைகள் யாவற்றையும் பலாத்காரப் புரட்சிகர வழிகளாலேயே மாற்றவேண்டுமென்ற கருத்துக் கொண்டிருந்தார். பெண்களுக்கிழைக்கப்பட்ட கொடுமைகளை ஒழிக்கவேண்டுமெனப் பாடிய பாடல்களில் இவ்வுணர்வை நாம் நன்று காணலாம். அக்காலத்தில் மதம் பற்றிய எதிர்ப்புணர்வு அறிவமைதியின் பாற்பட்ட ஒரு கட்டுக்கோப்புள்ளேயே நிற்கின்றது. கடவுளைப்பற்றிக் கூறும்பொழுது

''இல்லை என்பார்கள் சிலர்<br>
உண்டென்று சிலர் சொல்வார்<br>
எனக்கில்லை கடவுள் கவலை''

எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனல் காலஞ் செல்லச் செல்ல இந்த அறிவமைதியில் ஒரு மாற்றமேற்படுகின்றது. தமிழார்வம் திராவிட கோஷமாக மாறுகின்றது. சமூக முன்னேற்றம் சமய எதிர்ப்பாக மாறுகின்றது. சமய எதிர்ப்பு பிராமண இழிவாகப் பரிணமிக்கின்றது. முதலாவது கவிதைத் தொகுதி வெளிவந்த காலத்தில்

**சி. விமலநாதன்**

காணப்பட்ட உலக உணர்வும், இலட்சிய தாகமும் முற்றிலும் மறைந்து போய்விடுகின்றன. சமூக சீர்திருத்தம் கூட முக்கிய இடம் பெறவில்லை. பிராமண எதிர்ப்பே முக்கியமான இலட்சியமாகி விடுகின்றது.

இரண்டாம் மூன்றும் கவிதைத் தொகுதிகள் வெளிவந்த காலத்திலேயே பாரதிதாசன் திராவிடக் கவியாகப் போற்றப்பட்டார். திராவிட முன்னேற்றக் கழகக் 'கட்சியலுவல்களில்' அதிக சிரத்தையெடுத்த காலமும் இதுவே. திராவிடத்தைப் போற்றிய அதே காலத்தில் தான் தமிழிசை வேண்டுமென்றும், கன்னடப்பாடல்களும், தெலுங்குப் பாடல்களும் வேண்டாமென்றும் பாடினுர். இக்காலத்தில், முன்னர் முளையாக இருந்த ஒரு பண்பு மரமாகி வியாபிப்பதைக் காண்கின்ருேம். பழந் தமிழ் வாழ்வு பற்றிய ஆர்வம் அளவுக்கு மீறி மீண்டும் தமிழர் அத்தகைய வாழ்வையே நடத்த வேண்டுமென்ற வக்கரிப்புக் கொள்கையில் ஈடுபட்டார் பாரதிதாசன். சங்க காலத் தமிழ் வாழ்வுபற்றியே அவர் அதிக கவனஞ் செலுத்தினுர். தன்னைச் சுற்றியுள்ள புறவுலகுபற்றிய உணர்வு மறையத் தொடங்கிற்று. தி.மு.க., தி.க.வில் காணப்பட்ட பிளவுகள், முதலியவற்ருலும், தி.மு.க.வினரின் நடைமுறை விரசங்களினுலும் மனமுடைந்த அவர், ஆரியமற்ற சங்கத் தமிழ் வாழ்வுள் தன் தலையைப் புதைத்துக் கொண்டார். தன் சூழலை மறந்தார். தன்னை மறந்தார். புரட்சிக் கவிஞர் என்ற பெயரையே மாற்றிப் பாவேந்தர் என்று வைத்துக்கொண்டார். பண்டைத் தமிழ் இலக்கியங்களிற் காணப்பட்ட ஆரிய வழக்குகளை நீக்கித் தனித் தமிழ் முறைப்படி அவற்றை எழுத முனைந்தார். மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக் காப்பியம் இந்நிலையை எடுத்துக்காட்டுகின்றன. இறுதியில் முற்ருகக் கட்சியிலிருந்து விலக விரும்பினுர். இக்காலகட்டத்தில் தான் இயற்கையெய்தினுர்.

எளிமையாலும் உணர்வூக்கத்தாலும் இயக்கம் வளர்த்த கவிதைகளை இயற்றிய பாரதிதாசன், இறுதிக் காலத்தில் தனது கவிதைகளுக்குத் தானே கருத்தெழுதினுர். விளங்காச் சொற்களைக் கையாண்டார்.

பாரதிதாசனது இலக்கிய வாழ்வு 'சென்று தேய்ந்து இறுதல்' எனும் பண்பினைக் கொண்டது. மாறிவரும் காலத்திற் கேற்ப இலட்சியங்களுக்காகப் போராட வேண்டுமென்பதையும், சூழலை மறந்து இலக்கிய கர்த்தா என்றும் வாழமுடியாது என்பதையும் காட்டி நிற்கின்றது பாரதிதாசனது வாழ்க்கை.

# மட்டக்களப்பு தொழிலாளர் மத்தியில் புதிய எழுச்சி

**1949-ம்** ஆண்டு மேதின விழாவினை முதன் முதலில் மட்டக்களப்பில் அறிமுகம் செய்துவைத்தது, கம்யூனிஸ்டுக் கட்சியின் மட்டக்களப்புக் கிளையே. அன்று தொடக்கம் 1963-ம் ஆண்டு வரையும் தொழிலாளர்களின் உண்மைப் பிரதிநிதியான கம்யூனிஸ்டுக் கட்சி மட்டக்களப்புக் கிளை மேதினத்தினை இங்கு கோலாகாலமாகக் கொண்டாடி வந்துள்ளது.

ஆனல் இம்முறை (1964-ல்) பதவி ஆசையும் முதலாளித்துவ சிந்தனையும் கொண்ட இடதுசாரி ஐக்கிய முன்னணியினரில் சிலர் மேதின விழாவினை மட்டுநகரில் நடத்தினுர்கள். தொழிலாளர்களின் உண்மையான விசுவாசிகள் தாங்களே என்று தொண்டை கிழியக் கத்தியும் பார்த்தார்கள். ஆனல், இவர்களின் ஏமாற்று வித்தை மட்டக்களப்பு மக்களுக்கு வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியினரின் கூட்டத்தினையும், அவர்களின் ''தொழிலாளர்'' ஊர்வலத்தினையும், (அந்த ஊர்வலத்தில் தொழிலாளர்களே இல்லை) கூட்டத்திற்கு வந்திருந்த மிகமிகச் சொற்பமான மக்கள் தொகையினையும் கண்ட பொதுமக்கள் தொழிலாளர்களின் உண்மைப் பிரதிநிதி யார் என்பதையும் தொழிலாளர்களின் ஆதரவு எப்பக்கமிருக்கின்றது என்பதையும் திட்டவட்டமாக நேரில் கண்டுகொண்டார்கள்.

மட்டக்களப்பில் இடதுசாரி ஐக்கிய முன்னணியினர் நடத்திய மேதின விழா புஸ்வாணமாகிவிட்டது. மட்டக்களப்புப் பொதுமக்களுக்கு இவர்களது சுயநலப் போக்கு அம்பலமாகிவிட்டது.

இதே நேரத்தில் இம்முறை கம்யூனிஸ்டுக் கட்சியின் மட்டக்களப்புக் கிளையும் முற்போக்கு வாலிபர் சங்கமும் சேர்ந்து தொடர்ந்து இது வரையும் நடத்திவநத மேதின விழாவினை இம்முறை நடத்தவில்லை. கொழும்பில் தொழிலாளர்களின் உண்மைப் பிரதிநிதியான கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிலாளர் விழா எவ்விதம் நடைபெறுகின்றதென்பதைக் காட்டும் முகமாகவும்,

**கே. வி. கிருஷ்ணக்குட்டி**
சி. டி. யூ. எப். பிரதிநிதி
மட்டக்களப்பு.

தொழிலாளர்களின் சக்தியினை-அவர்களின் ஏகோபித்த புரட்சி ஒற்றுமையினை ஒவ்வொரு தொழிலாளியும் நேரே கண்முன் காணவும் இம்முறை அம்பாறையிலிருந்தும், மட்டக்களப்பிலிருந்தும் 78 தொழிலாளர்களை அழைத்துக்கொண்டு கொழும்பு சென்றது.

கொழும்பில் நடைபெற்ற உண்மையான தொழிலாளர் விழாவினையும் தொழிலாளர்களின் பலத்தினையும் எதிரிகளின் காகிதப் புலித்தன்மையினையும் மட்டக்களப்புத் தொழிலாளர்கள் நேரில் கண்டுகொண்டார்கள்.

''கிருஷ்ணக்குட்டி பற்றி அவதூறுகள் புனைந்த மட்டக்டக்களப்புத் திரிபுவாதிகளினதும் ''சண்முகதாசன் தமிழன் அவன் பின்னல் நாம் போவதா''? என்று கேட்ட இலங்கைத் திரிபுவாதிகளினதும் கூற்றுக்கள் எவ்வளவு தூரம் சுயநலத் தன்மை கொண்டவை என்பதை கொழும்பு மேதினம் மட்டுநகர் தொழிலாளர்கட்கு நன்கு உணர்த்தியது.

கொழும்பு மேதினத்தின் பின் மட்டக்களப்புத் தொழிலாளர் மத்தியில் புதிய எழுச்சி காணப்படுகிறது. புதிய வேகம் காணப்படுகிறது.

எண்ண சுத்தியுடனும் கொள்கைத் திடத்துடனும் அவர்கள் திரள்கிருர்கள். தொழிலாளர்களின் 21 கோரிக்கைகளுக்காகப் போராடத் தயாராக இருக்கிருர்கள். இதே நேரத்தில் வாழைச்சேனைக் காகிதத் தொழிற்சாலையிலிருந்து மொழிவழித் தொழிற்சங்கத்தினிலிருந்தும்; திரிபுவாதிகளின் தொழிற் சங்கங்களிலிருந்தும் பிரிந்த தொழிலாளர்கள் 21 கோரிக்கைகளுக்காகப் போராட எம்முடன் இணைந்துள்ளார்கள்.

தொழிலாளர்களின் கூட்டுறவும், போராட்ட எண்ணமும், நாளுக்கு நாள் வலுப் பெறுகின்றது. எதிர்காலப் புதிய சமுதாயம் காணும் பணியில் போராட மட்டக்களப்புத் தொழிற் சங்க சம்மேளத்தின் கீழ் மட்டக்களப்புத் தொழிலாளர்கள் தயாராக இருக்கின்ருர்கள்.

## வேண்டுகோள்!

தொழிலாளர்களின் உண்மைப் பிரதிநிதியான புரட்சி எண்ணம் கொண்ட கட்சித் தோழர்கட்கும், இலங்கைக் கம்யூனிஸ்டுக் கட்சித் தொழிற் சங்கத் தலைவர்கட்கும் ஒரு வேண்டுகோள்.

மே மாதம் 3-ம் திகதி என்னைச் சில உயர்ந்த அரசாங்க உத்தியோகஸ்தர்கள் திரிபுவாதிகளுடன் சந்தித்து என்னையும் ஒரு திரிபுவாதியாளனுக்கிக் 'கெனமன்' கும்பலுடன் சேர்க்க முயன்றனர். நான் அதனைத் தீவிரமாக மறுத்த பட்சத்தில் அவர்கள் பலாத்காரம் உபயோகிக்கவும் தயாராக இருந்தார்கள்.

'உயிர் போனுலும் உண்மையான கொள்கையினின்றும் மாறமாட்டேன். தொழிலாளர் வர்க்கத்திற்குத் துரோகம் செய்யமாட்டேன்' என்ற என்னுடைய இறுதிப் பேச்சினை மாற்ற முடியாது தோல்வி கண்டு அவர்கள் சென்றுவிட்டார்கள்.

தோல்விகண்ட உயர்ந்தவர்களும்; திரிபுவாதிகளும் மட்டக்களப்பில் சும்மா இருக்கவில்லை. கேவலமான முறையிலும் தகாத முறையிலும் என்னைத் திட்ட ஆரம்பித்திருக்கிருர்கள். மட்டக்களப்பிலேயுள்ள றஷீடியா ஹோட்டல் முதலாளியிடம் கிருஷ்ணக்குட்டி 500/- ரூபா லஞ்சம் வாங்கிக்கொண்டு தொழிலாளர்களைக் காட்டிக்கொடுத்தார் என்று பல பொய்யான அவதூறுகளையும் கூறி எமது பலத்தினைக் குறைக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்கிருர்கள்.

இவர்களின் சொல்லும் செயலும் அதிககாலம் நீடிக்கப்போவதில்லை; விரைவில் தொழிலாளர்களால் இவர்கள் விரட்டி அடிக்கப்படப் போவதைக் காணத்தான் போகிருேம்.

தோழர்களே! உங்களுக்கும் இத்தகைய அனுபவங்கள், ஏச்சுக்கள் ஏற்படலாம். அல்லது இதைவிடக் கூடுதலாகவும் ஏற்படலாம். அனைத்தையும் தூசென மதியுங்கள்.

தொடர்ந்து போராடுவோம். திரிபுவாதிகளினை முறியடிப்போம். தொழிலாளர் அரசு காண்போம்.

# காங்கிரஸ் பத்திரிகைக்கு 30 ஆயிரம் கடன்
# கள்ளக் கையெழுத்திட்டுக் கொடுத்தார் டாங்கே
# கஞ்சி சாப்பிடும் கர்மவீரன் நம்பூதிரி

**ஏகாதிபத்தியத்தின் கையாள், இந்திய திரிபுவாதி, குருசோவ் பந்தம் டாங்கேயைக் காட்டிக்கொடுத்த கடிதங்களைத் 'தொழிலாளி' பிரசுரித்தது கண்டதும் வயிற்றுப் பிழைப்புக்காகப் படுபொய் பேசும் பக்தன் பதட்டமடைந்து பதில் என்ற பெயரில் பீட்டரின் ஊதுகுழல் பத்திரிகையில் இருபக்கங்களில் என்னவோ நிரப்பிவைத்துள்ளார். டாங்கே விசாரணை ஏன் கோரவில்லை? என்ற நேரடியான கேள்விக்கு அங்கு பதில் கிடையாது. சரி, இதோ இன்னுமொரு செய்தி, டாங்கேயின் சுயரூபத்தைப் பறைசாற்றுகின்றது. இதே போன்ற இன்னுமோராயிரம் வெட்கங்கெட்ட செய்திகளை நாம் தரமுடியும். பதில் தரும்படி பக்தன்களுக்குப் பகிரங்கமாகச் சவால் விடுகின்றோம்.**

இந்த வாரம் இரண்டு செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. ஒவ்வொரு கம்யூனிஸ்டின் உள்ளத்தையும் நெகிழச் செய்கின்ற செய்தி ஒன்று. ஒவ்வொரு கம்யூனிஸ்டும் வெட்கித் தலை குனிய வேண்டிய வேதனை தரும் செய்தி மற்றொன்று.

திருவனந்தபுரத்தில் தோழர் இ. எம். எஸ். நம்பூதிரிபாட்டை செய்தியாளர்கள் பேட்டிகாணச் சென்றனர். வந்த செய்தியாளர்களுக்கு உட்காருவதற்கு நாற்காலிகள் கூடப் போடமுயாத நிலையில், பாய்களை விரித்துத் தனது சின்னஞ்சிறிய வீட்டில் இ.எம்.எஸ். உட்கார வைத்தார். தனது சொத்துக்களையெல்லாம் விற்று கட்சிக்குக் கொடுத்துவிட்டதால் இ. எம். எஸ். இந்த ஏழ்மைநிலைக்கு உள்ளாகியிருக்கிறார் என்று 'டைம்ஸ்' ஆப் இந்தியா (20-4-64) நிருபர் எழுதியிருக்கிறார். கட்சிக்காக தனது சொத்துக்களையெல்லாம் தியாகம் செய்த அந்தக் கர்மவீரனின் எளிய நிலைமையைச் சித்தரித்துக் காட்டிய 'டைம்ஸ் ஆப் இந்தியா' இந்தச் செய்தியைத் தடித்த எழுத்துக்களிலே வெளியிட்டிருக்கிறது. இந்த முதலாளித்துவ ஏட்டிற்குக் கூட இதயம் இளகி விட்டது போலும்! இதுமட்டுமா? தோழர் இ. எம். எஸ். முதல் மந்திரியாக இருக்கும் பொழுது வெறும் கஞ்சிதான் சாப்பிடுவாராம். மாநில செகரட்டேரியட்டுக்குள்ளேயே கஞ்சி காய்ச்சி வாழ்க்கை நடத்தின முதல் மந்திரி இவர் ஒருவர்தான்!

இதோ இன்னொருசெய்தி 'நவமணி' ஏடு (16-4-64) தந்திருக்கிறது. அந்தச் செய்தியைத் தந்தவர் டாங்கே ஆகும். டெல்கியிலிருந்து வெளிவரும் 'பேட்ரியட்' என்ற காங்கிரஸ் நாளிதழ் 'லிங்க்' செய்தி பத்திரிகையின் உடன்பிறப்பாகும். கட்சியைப் பிளவுபடுத்தும் முறையில் 'லிங்க்' வெளியிடுவதால் அந்தப் பத்திரிகையோடு எந்தக் கம்யூனிஸ்டும் தொடர்பு கொள்ளக் கூடாது என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்து இருக்கிறது. ஆனால் 'லிங்க்' ஏட்டின் உடன் பிறப்பாகிய 'பேட்ரியட்' பத்திகைக்கு டாங்கே 30 ஆயிரம் ரூபாய் கொடுத்து உதவினாராம். டாங்கேக்கு இவ்வளவு பெரும் தொகை எங்கிருந்து வந்தது என்று நாம் கேட்கத் தயாராக இல்லை. ஒரு பத்திரிகைக்கு 30 ஆயிரம் ரூபாய் கொடுத்து உதவக் கூடிய நிலையிலே டாங்கே இருந்தால் அவருடைய சொத்தின் மதிப்பு என்ன? அந்தச் சொத்து எப்படி வந்தது? இதோ டாங்கே கூறியதைத் தருகிறோம்.

''டெல்கி பத்திரிகையொன்றில் (பேட்ரியட்) நான் 30 ஆயிரம் ரூபாய் முதலீடு செய்திருப்பதாகக் கூறுவது தவறு. மேற்படி பத்திரிகைக் கம்பெனி எம்மிடம் 30 ஆயிரம் ரூபாய் கடனாக வாங்கிக் கொண்டது. அதற்கு ஈடாக ரூ. 30 ஆயிரத்துக்குப் பங்குகளைக் கொடுத்திருந்தது. பங்கு நமூனக்களில் நான் கை எழுத்துப் போட்டேன். வர்த்தக காரணங்களுக்காக எனது பெயர் சம்பந்தப் படுவதை எவரும் விரும்பமாட்டார்கள். ஆகவே பங்குப் பத்திரங்களில் ''எஸ். அமிர்த்'' என்ற பெயுரை நான் பயன்படுத்தினேன்'' (நவமணி 16-4-64)

திருவாளர் டாங்கே கள்ளக் கையெழுத்துப் போட்டு காங்கிரஸ் பத்திரிகைக்கு 30 ஆயிரம் ரூபாய் கடனகக் கொடுத்திருப்பதாகக் கூறுகிறார். ஒரு கம்யூனிஸ்ட் தலைவர் செய்யக் கூடிய செயலா? எந்தப் பத்திரிகைக் கும்பலோடு தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்று கட்சி முடிவு செய்ததோ அந்தப் பத்திரிகையோடு கட்சியின் தலைவரே கள்ளத் தொடர்பு வைத்துக் கொள்வது இந்த நூற்றாண்டின் தலைசிறந்த மோசடியா? இல்லையா? உள்கட்சி விவாதங்களெல்லாம் அந்தப் பத்திரிகையில் அழகாக வந்ததே, அந்தச் செய்திகளையெல்லாம் டாங்கேதான் கடனகக் கொடுத்து உதவினரா? இதே பேட்ரியட் பத்திரிகையில் ரூ. 1 லட்சத்திற்கு ஹைதரபாத் நிஜாம் 100 பங்குகள் வாங்கியிருக்கிறார்! இந்தப் பத்திரிகை டாங்கே கடன் கொடுத்தாராம்! ''என்னை விடுதலை செய்யுங்கள்; மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஒற்றனக வேலை செய்கிறேன்'' என்று வெள்ளையன் ஆட்சிக்கு விண்ணப்பம் போட்ட டாங்கே இன்றும் ஒவ்வொரு தேசிய கவுன்சில் கூட்டம் முடிந்ததும் ஓடோடிச் சென்று பண்டித நேருவைப் பார்த்து செய்தி பரிமாறிய டாங்கே காங்கிரஸ் ஏடாம் 'பெட்ரியட்' டுக்குக் கடன் கொடுத்து உதவக் காரணம் என்ன? ஓராயிரம், மூவாயிரம் அல்ல 30 ஆயிரம் ரூபாய்!

கொள்கைக்காக, லட்சியத்துக்காக சொத்துக்களை இழந்த உத்தம தலைவன் இ. எம். எஸ். எங்கே? காங்கிரஸ் ஏடுகளுக்கு கள்ளக் கையெழுத்துப் போட்டுக் கடன் கொடுக்கும் அளவிற்கு 'லட்சங்கள்' தேடிவிட்ட டாங்கே எங்கே? எத்தனை கோடி இன்னல் வரினும் அத்தனையையும் துச்சமென மதித்து உழைக்கும் மக்களின் உன்னத ஆட்சியைக் காண உயிர் கொடுப்பேன் என்று சொத்துக்களை எல்லாம் இழந்துவிட்ட பின்னரும் நெஞ்சுயர்த்திக் கூறுகின்ற இ.எம்.எஸ். எங்கே?

கம்யூனிஸ்ட் கட்சியில் இன்று எழுந்துள்ள இரண்டு கருத்தோட்டங்களைப் பிரதிபலிப்பவர்கள்.

இருந்த 'லட்சங்களை' இழந்த, லட்சியத்திற்காக நிற்கும் இ. எம். எஸ்!

லட்சங்களைச் சேர்த்து பம்பாய் கடற்கரையில் குளுகுளு பங்களாவில் குடியேறியிருக்கும் லட்சியத்தை இழந்த டாங்கே!

குளு குளு பங்களாவில் குடியேறி விட்டவர்கள் காங்கிரஸ் ஏடுகளுக்குக் கடன் கொடுப்பது கண்டும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. தொழிலாளி வர்க்கத் தலைவர்கள் இருந்த பங்களாவை இழந்து சின்னஞ்சிறிய வாடகை வீட்டில் குடியேறியது கண்டும் வியப்படையத் தேவையில்லை.

நன்றி: தீக்கதிர். 2-5-64

# புரட்சித்தலைவர் ராமமூர்த்திக்கு மகத்தான வரவேற்பு

கல்கத்தாவிலிருந்து ஏப்ரில் 27-ம் திகதி சென்னை சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தோழர் பி. ராமமூர்த்திக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. தோழர் ராமமூர்த்தியை வரவேற்பதற்கு நூற்றுக்கணக்கான கட்சித் தோழர்கள் சென்ட்ரல் ஸ்டேசனில் கூடியிருந்தனர்.

தோழர் ராமமூர்த்திக்கு அளிக்கப்படும் வரவேற்பில் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொள்ளக் கூடாது என்று 'ஜனசக்தி' வாயிலாகவும், நேரிலும் திரிபுவாதிகள்நயமாகவும், மிரட்டியும், ஆணையிட்டிருந்தும் அவர்கள் முகத்தில் கட்சி உறுப்பினர்கள் சரியாகக் கரிபூசினர். ஜனசக்தி ஊழியர்களும், தொழிலாளர்களில் பலரும் ஆபிசுக்கு லீவு போட்டே, ராமமூர்த்திக்கு வரவேற்பளிப்பதில் முன்வரிசையில் நின்றனர்.

ஸ்டேசனே அதிரும் வண்ணம் எழுந்த கோஷங்களின் மத்தியில் தோழர் ராமமூர்த்தி ரயிலை விட்டு இறங்கியதும் தோழர்கள் எம். ஆர். வி. சங்கரய்யா, சிந்தன், மேயர் தோழர் எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் மாலை போட்டு அவரை வரவேற்றனர். 100க்கு மேற்பட்ட கிளைகள், மன்றங்கள் சார்பில் அவருக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. திரிபுவாதிகளால் மறியல் (சஸ்பென்ட்) செய்யப்பட்ட 32 தலைவர்களின் அறிக்கைகையை நிறைவேற்றும் தோழர்களின் உறுதி தெரிவிக்கப்பட்டது.

வரவேற்பிற்குப் பதில் அளித்த தோழர் ராமமூர்த்தி ''எனக்களிக்கப்பட்ட வரவேற்பு தனிப்பட்ட முறையில் அளிக்கப்பட்டதல்ல, கட்சியில் உருவாகியுள்ள வலதுசாரித் திரிபுவாதிகளை எதிர்க்கும் உங்களி அணியிள் பிரதிநிதிகளில் ஒருவனுக்கு அளிக்கப்பட்டதாகும்'' என்று கூறினார்.

பேச ஆரம்பிப்பதற்கு முன் தோழர் ராமமூர்த்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்க! தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக! என்ற கோஷங்க்ள் கர்ஜித்த பொழுது, கூடியிருந்த தொண்டர்களில் பிரதிபலித்த உணர்ச்சியும் உற்சாகமும் வருங்காலத்தின் வாக்குறுதிகளல்லவா எனத் தோன்றிற்று.

அன்றுகாலை மெமோரியஸ் ஹோலில் நடைபெற்ற பேரவையில் தோழர் ராமமூர்த்தி தேசியக் கவுன்சில் நிகழ்ச்சிகளையும் டாங்கே கோஷ்டியினரின் சென்றகால சீர்குலைவு வேலைகளையும் குறித்து விரிவாகவும் தெளிவாகவும் அறிக்கை செய்தார்.

ஏறத்தாள 800 உறுப்பினர்கள் கலந்து கொண்ட, தோழர் கே. கஜபதியின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் 32தோழர்களின் அறிக்கையை ஆதரித்தும், டாங்கே கோஷ்டியின் சீர்குலைவுப் போக்கைக் கண்டித்தும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. இறுதியில் தோழர்கள் கே. எம். ஹரிபட், சீனிவாசன், பி. ஜி. கே. கிருஷ்ணன், பச்சையப்பன், சிங்காரம், வரதன் மற்றும் பல தோழர்களைக் கொண்ட சென்னை மாவட்ட அமைப்புக்குழு ஒன்றும் நிறுவப்பட்டது.

(நமது விசேஷ இந்திய நிருபர்)

## கல்யாணசுந்தரம்
# கலா மன்றம்

இளமையிலேயே புதுமைக் கவிகள் பாடி எல்லோர் மனதிலும் இடம் பெற்று எதிர்பாராதபடி இளம் பருவத்திலேயே இயற்கை எய்திய புதுமைக் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் திருநாமத்தின் ஞாபகார்த்தமாக ஒரு கலாமன்றம் பண்டாரவளையில் நிறுவப்பட்டுள்ளது.

இம்மன்ற முழுப் பொறுப்பாளராக எம். எஸ். நாதன் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

மன்றத்தின் சார்பாக நாடகங்கள் [illegible] கலை விழாக்கள் நடத்துவதெனவும், கலையார்வமுள்ள இளைஞர்கட்கு தகுந்த ஆதரவு கொடுத்து அவர்களை முன்னணிக்கு கொண்டுவருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

வெகு விரைவில் பண்டாரவளையில் ஒரு சீர்திருத்த நாடகம் நடாத்தவும் முடிவு செய்யப்பட்டது!

(ந. நி.)

# புத்தொளி காட்டும் புனிதபான
# புரட்சிப் பாதையின் தீபஸ்தம்பம் இலங்

**1963** மே தினத்தின் பின்பு எமது நாட்டில் ஏற்பட்ட முக்கிய சம்பவங்கள் பற்றி ஆராய்வது மிகவும் பிரயோசனமுடையது. 1963 ஜனவரி - பெப்ரவரி மாதங்களில் இ. போ. ச. ஊழியர்களினல் மேற்கொள்ளப்பட்ட வீரமிக்க வேலை நிறுத்தப் போராட்டத்தை முறியடிக்க கருங்காலி வேலைகள் செய்த கருங்காலிகள் தலைவனுக்கு தங்கப் பதக்கம் கொடுத்த 1963 ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மே தினத்தை நாம் மறந்துவிட முடியாது. கருங்காலித்தனம் செய்த அரசாங்கமும் அரசாங்கக் கட்சியும் கொள்கையற்ற இடதுசாரி முன்னணித் தலைவர்களுக்கு இனிமையானவையானலும், தொழிலாளவர்க்கத்தின் கோபமும் சாபமும் தேங்கி நாற்றமடிக்கும் அரசாங்கத்துக்கு இவ்விரு மாதங்களில் கிடைத்துள்ளது.

பிரசித்தி பெற்ற புரட்சிகரப் போராட்டங்களை மறந்து, தொழிலாள வர்க்கத்தின் கண்களில் மண்ணைத் தூவி, பொய் முகமூடி அணிந்து செல்லும் சீர்திருத்தவாத, திரிபுவாதத் தலைவர்களுக்குக் கடந்த 12 மாதக் காலத்தில் எழுதப்பட்ட சரித்திரத்தை மீண்டும் நினைவூட்டுதல் வேண்டும். இந்நாட்டில் கஷ்டப்படும் தொழிலாள, விவசாய மக்கள் கற்றுக் கொண்ட பாடங்களைச் சற்றுச் சுட்டிக்காட்டுவது அவசியம்.

## இரத்தத்தில் தோய்ந்த ஆகஸ்ட் 12

கடந்த வருடத்தில் மறக்க முடியாத சரித்திரப் பிரசித்தி பெற்ற தினம் ஆகஸ்ட் 12-ம் திகதியாகும். அன்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும், இலங்கை சமசமாஜக் கட்சியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் இடதுசாரி ஐக்கிய முன்னணி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. அன்று சுதந்திரத்திற்காக, நாட்டின் நல்வாழ்வுக்காக ஐக்கிய முற்ற பொதுமக்களும், நகரம் முழுதும் திரண்டு சென்ற ஊர்வலமும் புரட்சிகர சக்திகளுக்கு உற்சாகம் தந்தன. ஆனல் இவற்றினை இடதுசாரி முன்னணி விருத்தியாக்கி வளர்க்கவில்லை.

1953 ஆகஸ்ட் 12-ல் இந்நாட்டை ஆட்சி செய்த மந்திரிசபை கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட கப்பலுக்கு ஓடும்வரை வீரஹர்த்தால் போராட்டம் நடைபெற்றது. அதற்குச் சரியாகப் பத்து வருடங்களின் பின், எமது தாயகத்தை நேசித்து, தமது கடைசி மூச்சுவரை போராடி, உயிரைத் தியாகம் செய்த ஹர்த்தால் வீரர்களின் நாமத்துக்குப் புகழ் தரும் விதத்தில் இடதுசாரி ஐக்கிய முன்னணி ஒப்பந்தம் உருவாகியது. இத்தினத்தில் போராட்டத்திற்குச் சத்தியம் செய்த தலைவர்கள் இன்று ஸ்ரீ லங்கா அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுக்கும் நிலைமையில் இருக்கின்றனர். ஆனபடியால் நம் நாட்டு மக்களும் குறிப்பாக முற்போக்காளர்களும் எதிர்பார்த்த முறையில் இடதுசாரி இயக்கத்தை இயங்கச் செய்வதற்கு 1964 மே தினத்தில் நாம் உறுதி கொள்வோம்.

## 21 கோரிக்கைகள்

துறைமுகம், வர்த்தக, வங்கி ஊழியர், இ. போ. ச. ஆகியவை தனித்துத் தனித்துப் போராடித் தமது கோரிக்கைகளை வெற்றிபெற முடியாதது சென்ற ஆண்டு தெளிவாகியது. தொழிற் சங்கக் கோரிக்கைகள் வெற்றிபெற பொதுப் போராட்டத்திற்குத் தயாராக வேண்டிய அவசியத்தை உணர்ந்த இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம், ஈழத்திலுள்ள சகல பிரதான தொழிற் சங்க மத்யஸ்தானங்களையும் ஒற்றுமைப் படுத்துவதில் முன்நின்று தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டியை ஏற்படுத்திக் கொண்டது. இது தொழிலாள வர்க்கத்திற்கு மட்டுமல்லாமல் சகல மக்களுக்கும் நலன்தரும் சரித்திரப் பிரசித்திபெற்ற சங்கமமாகும்.

மாதக் கணக்காகப் பேச்சுவார்த்தை நடாத்தி, தொழிற் சங்கங்களிடையே ஐக்கியத்தை உண்டுபண்ணியதன் பின் சிலின்கோ மண்டபத்தில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த மாநாடு நடைபெற்றுக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதன் பின் 21 கோரிக்கைகள் பற்றி நாடு பூராவும் பிரச்சாரம் செய்து இறுதியில் மார்ச் 21-ம் திகதி கோரிக்கைகளுக்காதரவாக தொழிற் சங்கங்களின் ஐக்கிய ஊர்வலமும், காலிமுக மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டமும் நடைபெற்றன.

ஆனல் 21 கோரிக்கைகளைச் சமர்ப்பித்துப் போராடுவதற்குப் பதிலாக நுவரெலியா உல்லாச சல்லாப பிரதேசத்தில் விநோத விளையாட்டுக்களில் ஈடுபடும் தலைவர்கள் தமக்குப் பழக்கத்தில் வந்த சுகபோக வாழ்க்கையை நடத்துகிறார்கள். இவ்வருட மேதினம் வாழ்க்கைச் செலவினல் நசுக்கப்பட்டு இருக்கும் சகல மக்களுக்கும் ஆதரவாக, இப் பிற்போக்கான கபடத் தலைவர்களிடமிருந்து 21 கோரிக்கைகளைப் பாதுகாத்து வெற்றி கொள்வதற்கான தினமாகும் என்பதை நினைவுறுத்திக்கொள்வோம்.

## தொழிலாள வர்க்க முன்னணி

இக்காலத்தில் மாக்சிஸ-லெனினிஸத்தின் தூய்மையைப் பாதுகாத்து, இந்நாட்டில் ஏகாதிபத்திய விரோத, திரிபுவாதி நிலப்பிரபுத்துவ விரோ தரட்சிவாதிக புரட்சிகரக் கடமைகளை நிறைமடை, புதி வேற்றப் பலம் மிக்கதானம் இலங் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்ங்க சம்மே சியை நவீன திரிபுவாதச் சேற்ரிபுவாதிக றிலிருந்து மீட்டுப் புரட்சிக்க்சிஸ- கொடியை உயர்த்திப் பிடித்தளின் போ தும் முக்கியமானதாகும். லெனின்

தைகளுக்கு

பட்டங்கள் பெற்ற பழை வர்க்க தலைவர்களாகிய கோமாளி றுவது எப் களை எமது கட்சியின் தலைத்துவ ரீதிய மைப் பதவிகளிலிருந்து வெளி மூலம் இல யேற்றி நாட்டிற்கும், தொழி திகளின் லாள வர்க்கத்திற்கும் தவயும், தேச றற்ற, நேர்மையான புரட்சி றி மறுமு கரத் தலைமையைப் பெற்றுத் ப் போராட தந்த இலங்கைக் கம்யூனிஸ்ட் கொண்டு கட்சியின் சரித்திரப் பிரசித்தித் தொழிற் பெற்ற 7-வது தேசிய மாநாடுமும் அதன்

> 1963 மே தினத்திற்கும் மே தினத்
> இடதுசாரி இயக்கத்திலும் ழிலாளர்
> சம்பவங்கள் நடந்தேறியுள் இலங்கைக்
> சம்மேளனம் ஆகியவற்றின்க்சிஸ - லென
> தொழிலாளர் நலனைப் பாது உறுதியா
> டத்தின் ஒவ்வொரு கட்டத் அயராது,
> ஜினேந்திரபால (உதவித்ய அமைப்பாள
> ஆண்டு சபம்வா முக்கியத்

இக்காலத்திலேயே நடைபெற்ளர் தோழர் றது. சனுமேயாகு

## புரட்சிவாதிகளின் கேந்திர ஸ்தானம்

நவீன திரிபுவாதிகள் மற்றும் இடதுசாரித் தலைவர்கள தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்த வேளையில் தொழிலாள வர்க்கத்தின் நேர்மையான ஒளிமிக்க வழிகாட்டியாகவும், முழு நாட்டிற்கும் தீபஸ்தம்பமாகவும், தொழிலாளர்களின் கேந்திர ஸ்தானமாகவும் அமரத்துவப் பணி புரிந்தது இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம்.

ரட்சிகரப் சுடராக றது இலங் சம்மேளன திரிபுவாதி வுபடுத்தி முயற்சி தோல்வி கன் டத்துக்கொ டினர்கள். ாகிகளின் ச்சிகளை விழு வர்க்கத்தின் க்கமாக ழிற் சங்க று பிரபல்யம கின்றது. அ ற்ற போரா த்தை மாசுப சக்தியை எவராலும் மு

லங்கைக் கம்யூ உண்மைய லெனினிஸ ாகமூட்டி வர் நக்கெதிராகப் களைத் தட் இலங்கைத் சம்மேளனத் முக்கியத்துவ து மாநாடு ர் முகம்கா விதத்தில் பில் நடைபெற் ம் நிறைந்த ம். இலங்கை கட்சியின் ப மாநாட்டை டையச் செய்



கம்யூனிஸ்ட் ஊர்வலத்தில் புரட்சிக் கொடி ஏந்திவரும் வீர வனிதையர், நடுவில் நாளை உலகத்தின் சிற்பிகள்.

# கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து விட்டீர்களா?

இன்று இடதுசாரி இயக்கம் பெரியதோர் அரசியல் குழறுபடியில் அகப்பட்டுள்ளது. பல்லாண்டுக் காலமாக புரட்சி, சோஷலிசம் பற்றிப் போதித்த தலைவர்கள் இன்று கொள்கைகளை விட்டுக் கொடுத்தல், வர்க்க சமரசம், தொழிலாள வர்க்க விரோத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு முதலியவை பற்றிப் பேசுகின்றனர்.

இத்தகைய நிலைமையில், மாக்சிஸ-லெனினிஸ இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான் தெளிவான புரட்சிகரக் கொள்கையைக் கொண்டுள்ளது. ஆகவே எங்கள் கம்யூனிஸ்ட் கட்சியைப் பலப்படுத்துவதன் மூலமே, தொழிலாள வர்க்கத்தின் நலன்களுக்கு உகந்த முறையில் இன்றைய நெருக்கடிக்குத் தீர்வு காணமுடியும்.

மேதினத்தில் எமது ஸ்தாபன பலம் திரிபுவாதிகளிலும் கூடுதலானது என்பதை நாம் காட்டினேம். இலங்கை சமசமாஜக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் தொங்குதசைகளாக இருப்பதைத் தவிரத் திரிபுவாதிகளுக்குத் தனிப்பட்ட வாழ்வில்லை என்பதை மார்ச் 21-ம் திகதி ஊர்வலத்தில் உணர்ந்துகொள்ளாதவர்கள் இருந்தால் மேதின ஊர்வலம் அவர்களுக்கு இவ்வுண்மையைத் திரும்பவும் உணர்த்தியுள்ளது. தொழிலாள வர்க்க இயக்கத்தில் மாக்சிஸ-லெனினிஸ வாதிகளாகிய எங்களுக்கே பெரும் ஆதரவுண்டு என்பதை மேதினத்தில் நாம் காட்டினேம். தனியனக எடுக்கும்பொழுது எமது மேதின ஊர்வலமே மிகப் பெரியதும் கவர்ச்சி மிகுந்ததும் ஆகும்.

இப் பலத்தை நாம் ஸ்தாபனரீதியாகத் திரட்டி பலம் மிக்க கம்யூனிஸ்ட்கட்சியாகஉருவாக்குதல் வேண்டும். மேதினத்தில் எமது ஊர்வலத்தில் அணிதிரண்ட நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் எமது கட்சியில் சேரத்தகுதி மிக்கவர்கள், நாம் அவர்களுக்கு அழைப்பு விடுகின்றேம். இனியும் தாமதம் செய்யாதீர்கள். கட்சியில் சேருங்கள். மாக்சிஸ-லெனினிஸ போதம் பெறுங்கள். புரட்சிகர இயக்கத்துக்குத் தலைமை தாங்கத் தயாராகுங்கள்.

இன்று எழுகின்ற எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய ஒரே பிரச்சினை பலம் மிக்க புரட்சிகரக் கம்யூனிஸ்ட்கட்சியை கட்டி எழுப்புவதே என நாம் திரும்பவும் வலியுறுத்துகின்றேம்.

தோழர்களே! இன்றே கம்யூனீஸ்ட் கட்சியில் சேருங்கள்!

123யூனியன் பிளேஸ்,
கொழும்பு: 2.

தேசிய அமைப்பாளர்
இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி

# ...மான புரட்சிக் கொடி உயர்ந்தது

## இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம்

ரோத, ரோத நிறை தான . கட் சேற் ரட்சிக் டித்த . ழைய மாளி தலை வெளி தாழி தவ ரட்சி ற்றுத் ளிஸ்ட் சித்தி நாடு

திரிபுவாதிகளுக்கெதிரான புரட்சிவாதிகளின் சங்கமமேடை, புதிய கேந்திர ஸ்தானம் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம். "நவீன திரிபுவாதிகளுக்கெதிரான மாக்சிஸ - லெனினிஸவாதிகளின் போராட்டம்," "லெனின் தினம்" ஆகிய பாதைகளுக்கூடாக "தொழிலாளர் வர்க்கம் அதிகாரம் பெறுவது எப்படி?" என்னும் தத்துவ ரீதியான போதனைகள் மூலம் இலங்கைப் புரட்சிவாதிகளின் வர்க்க உணர்வையும், தேசப் பற்றையும் கிளறி மறுமுறையும் அவர்களைப் போராட்டப் பாதைக்குக் கொண்டு வந்தது இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனமும் அதன் பொதுச் செய கேந்திரமாக அமைந்தது இம் மாநாடு.

### கம்கறுவா - தொழிலாளி

மாதத்திற்கு ஒரு முறை வெளிவந்த "கம்கறுவா", "தொழிலாளி" ஆகிய பத்திரிகைகள் வாரந்தோறும் வெளிவருகின்றன. இதுவரையும் எந்தவொரு இடதுசாரிப் பத்திரிகையும் செய்யாத சேவையை இவ்விரு பத்திரிகைகளும் ஆற்றுகின்றன; இந்நாட்டுத் தொழிலாள வர்க்கத்திற்கு முற்போக்கான அறிவைத் தந்துதவியுள்ளன.

தொழிலாள வர்க்க போதத்தை தவறாது வாரந்தோ

...கும் 1964 மே தினத்திற்கும் இடையில் நமது நாட்டில், குறிப்பாக ...திலும் தொழிலாளர் இயக்கத்திலும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த ...றியுள்ளன, இலங்கைக் கம்யூனிட்ஸ் கட்சி, இலங்கைத் தொழிந் சங்க ...பற்றின் மாக்சிஸ - லெனினிஸ, தொழிலாள வர்க்கத் தலைவர்கள் ...ப் பாதுகாத்து உறுதியான போராட்டம் நடாத்தினர். இப்போராட் ...கட்டத்திலும் அயராது, தளராது பங்குபற்றிய தோழர் டி. கே. டி. ...தவித் தேசிய அமைப்பாளர், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி) சென்ற ...பம்வங்களின் முக்கியத்தை இங்கு சுருக்கித் தந்துள்ளார்.

பெற் ரின் னம் மற் ர்கள ட்டிக் தாழி ர்மை ாட்டி ற்கும் தாழி தான பணி ாழிற் நும் .

லாளர் தோழர் நா. சண்முகதாசனுமேயாகும்.

புரட்சிகரப் பாதையின் தீச்சுடராக மேலெழுந்து நின்றது இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம். ஆகவேதான் திரிபுவாதிகள் அதனைப் பிளவுபடுத்தி அழித்து விடுவதற்கு முயற்சி செய்து முடிவில் தோல்வி கண்டி வெளியே உடைத்துக்கொண்டு பாய்ந்தோடினுர்கள். வர்க்கத் துரோகிகளின் சீர்குலைவுச் சூழ்ச்சிகளை விழுங்கி தொழிலாள வர்க்கத்தின் கலங்கரை விளக்கமாக இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் இன்று பிரபல்யமாகக் காட்சி தருகின்றது. அதன் பிரசித்தி பெற்ற போராட்ட சரித்திரத்தை மாசுபடுத்தவும் அதன் சக்தியை நாசப்படுத்தவும் எவராலும் முடியாது.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் உண்மையான மாக்சிஸ-லெனினிஸ வாதிகளுக்கு உற்சாகமூட்டி வர்க்கத் துரோகிகளுக்கெதிராகப் புரட்சிவாதிகளைத் தட்டி எழுப்பியது இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 16-வது மாநாடும், சீர்குலைவாளர் முகம்காட்ட முடியாத விதத்தில் மாநாட்டு முடிவில் நடைபெற்ற புரட்சிவேகம் நிறைந்த ஊர்வலமுமாகும். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 7-வது தேசிய மாநாட்டை பிரபல்யம் அடையச் செய்த முக்கிய

றும் தரும் இப்பத்திரிகைகள் தத்துவரீதியான அறிவையும், மாக்சிஸ-லெனினிச போதத்தையும், புரட்சிகரக் கண்ணோட்டத்தையும் அளிக்கின்றன. இத்துடன் துரோகிகளைத் தோலுரித்துக் காட்டிக்கொடுக்கும் பணியையும் ஏற்றுக்கொண்டுள்ளன.

### வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர் போராட்டம்

எமது நாட்டுத் தொழிலாளர் இயக்க வரலாற்றில் நீண்ட நாட்களாகவும் தீரத்துடனும் நடைபெற்ற வெள்ளவத்தை ஆலைப் போராட்டம் முதலாளித்துவ அரசாங்க இயந்திரத்தின் உண்மை உருவத்தைக் காட்டிய போராட்டமாகும். தொழிலாள வர்க்க இயக்கத்தில் உள்ள துரோகிகளையும் அம்பலப்படுத்திய இப்போராட்டம் உலக தொழிற் சங்க இயக்க வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய தொன்றுகும். இத்துடன் அரசாங்கத்தின் அடம்பிடிவாதக் கொள்கையை முறியடித்த வர்த்தக ஊழியர் போராட்டமும் குறிப்பிடப்படவேண்டியதாகும்.

### புரட்சிகர வாலிபர்கள்

இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு [illegible] வாலிபர்

சம்மேளனத்தை கருங்காலித்ருந்து திரிபுவாதிகளிடமிருந்து பாதுகாத்து மாக்சிஸ - லெனினின மணிக்கொடியை வாலிபர்கள் உயர்த்தியுள்ளனர். "தருணலங்கா" "யுவசக்தி" ஆகிய பத்திரிகைகள் மூலமும், அநுராதபுரியில் நடைபெற்ற கருத்தரங்க மாநாடு மூலமும் ஏகாதிபத்திய விரோத, நிலப்பிரபுத்துவ விரோத போராட்டப் பாதையில் வாலிபர் ஏறு நடைபோட்டுச் செல்கின்றனர். அதுபோலவே தமது சர்வதேசியக் கடமைகளையும் நிறைவேற்றியுள்ளனர்.

### கொழும்பு மாவட்டக் கமிட்டி

கபடத்தனமான, நயவஞ்சக வியாபாரநோக்குடைய, ஏமாற்றும், அகங்கார, ஏவலாள் கும்பலாகிய பண்டித, கெனமன், ரத்னவீர, கே. பி. சில்வா, சமரவிக்ரமா, ஜாக் பெரேரா ஆகிய துரைமார்களின் நகர சபைத் தேர்தல்களுக்காகவும் மாத்திரம் போஸ்டர் ஒட்டுவதற்கும், கள்ள ஓட்டுப் போடுவதுபோன்றவற்றிற்காகப் பாவிக்கப்பட்ட கொழும்பு மாவட்டக் கிளை இந் நிலைமைக்கு முடிவு வைத்துள்ளது. கொழும்பு மாவட்ட உறுப்பினர்களில் அதிகப்படியானவர்கள் கூடி புதிய தொரு தொரு மாவட்டக் கமிட்டியை அமைத்துக்கொண்டனர். இக்கிளை தற்பொழுது அதன் அங்கத்துவத்தைப் பெருக்கி மறுமலர்ச்சியடைந்து வருகின்றது.

### பத்திரிகை கமிஷன்

முதலாளித்துவ செய்திப் பத்திரிகையின் எதேச்சாதிகார ஏகபோகத்தை ஒழித்துக் கட்டுவதற்கு நியமிக்கப்பட்ட பத்திரிகைக் கமிஷனைச் சீர்குலைப்பதற்குத் திரிபுவாதிகள் முதலாளித்துவ செய்திப் பத்திரிகை முதலாளிகளுடன் கைகோர்த்துச் செயல்பட்டுள்ளனர். திருமதி தேஜா குணவர்த்தனுவைக் கமிஷனிலி

வெளியேற்றுவதற்கு பீட்டர் கெனமனும், டாக்டர் விக்ரமசிங்காவும் எடுத்த வெட்கங்கெட்ட முயற்சிகளை நாடறியும்.

தனது பழைய முதலாளியாகிய ஏரிக்கரைப் பத்திரிகைக்குப் பிரதியுபகாரமாக பீட்டர் கெனமன் என்ற பழைய ஊழியன் மிகவும் திறமையாகத் தனது விசுவாசமான கடமையைப் புரிந்துள்ளார். "சிறந்த மாக்ஸிஸவாதி' என லேக்ஹவுஸ்அவருக்கு நட்சாட்சிப் பத்திரம் கொடுத்ததில் ஆச்சரியமில்லை.

### அதிகாரம் எங்கே?

அரசியல் அதிகாரம் பாராளுமன்றத்தில் அல்ல, பாராளுமன்றத்திற்கு வெளியே இருக்கின்றது என்ற எமது கொள்

## தோழர் டி. கே. டி. ஜினேந்திரபால

உதவித் தேசிய அமைப்பாளர்
இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி

கையை, பாராளுமன்றத் தலைவர்களுக்குத் தெரியாமல் அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றியதும், பாராளுமன்றத்தைக் கூட்டாமல் நீண்டகாலத்துக்குத் தள்ளிப் போட்டதும் நிரூபித்துள்ளது. இது பொதுமக்களின் கண்ணைத் திறந்துள்ளது.

### போராட்டத் தளபதி சூ என்-லாய் வருகை

இதுநாள் வரையும் எந்த ஒரு பிரதமரும் செய்யாதளவு மிகவும் திறமையான பிரயாணத்தின் முடிவில் சீனப் பிரதமர், தோழர் சூ என்-லாய் இரண்டாவது முறையாக இலங்கைக்கு வந்தார். அவருக்கு எமதுநாட்டு மக்கள் பெருவரவேற்பளித்து மகிழ்வடைந்தனர்.

இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் பிரதமர்களில் ஏகாதி



இவ்வருட கம்யூனிஸ்ட் மேதின ஊர்வலத்தில் ஒரு பகுதி

பத்தியவாதிகள், நவீன திரிபுவாதிகள் ஆகியவர்களை எதிர்த்து உறுதியாகப் போராடும் அத்தகைய உதாரணபுருஷராகிய தோழர் சூ வின் பாதையில், ஆபிரிக்க முழுவதும் மலர்ந்துள்ளதைப் போல் எமது நாட்டிலும் புரட்சிகரப் பொதுமக்களின் போராட்ட சரித்திரத்தை மலரச் செய்ய நாம் முயல்வோம்.

### சர்வதேசிய கடமைகள்

ஜகர்த்தாவில் நடைபெற்ற தொழிலாளர் மாநாடு, ஆசிய-ஆபிரிக்க ஐக்கியத்துவ மாநாடு, தென் வியட் நாம் போராட்ட ஆதரவு மாநாடு, மலேசியாவை எதிர்த்த ஜகார்த்தா வாலிபர் மாநாடு ஆகியவற்றில் எமது பிரதிநிதிகள் கலந்து எம் சர்வதேசியக் கடமைகளை நிறைவேற்றியுள்ளோம். ஏகாதிபத்திய விரோத, நவீன காலனி விரோத உலகசக்திகளுடன் நாம் தோளோடுதோள் சேர்ந்து நின்றதைக் கடந்தகாலம் கூடுதலாகக் காட்டுகின்றது.

### சீர்குலைவாளர்கள்

கம்யூனிஸக்கொள்கைகளைத் திரிபுபடுத்தி, உலக கம்யூனிஸ இயக்கத்தைப் பிளவுபடுத்தும் உலக கம்யூனிஸ இயக்கத்தினதும், தோழர் லெனின் ஆரம்பித்த சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினதும், சோவியத் மக்களினதும் பரம துரோகியான குருஷ்சோவின் தாளத்திற்கு ஆடும் கெனமன்-விக்ரமசிங்கா கும்பல் தொழிலாள வர்க்க முற்போக்கு இயக்கத்துக்கு ஊறுவிளைவித்துள்ளனர். வெகுஜன முற்பேக்கு இயக்கங்களை நாசப் படுத்த முயற்சித்துள்ளனர். பெரும்பான்மை முடிவுகளை எதிர்த்து ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

நமது நாட்டுப் புரட்சிகரச் சரித்திரம் எழுதும் பொழுது திரிபுவாதிகளின் கருங்காலித்தனமும், காட்டிக் கொடுப்பும், பிளவுவேலைகளும் ரொம்பவும் அங்கு இடம்பெறும் என்பதில் சந்தேகமில்லை.

### வெற்றி யாருக்கு?

சென்ற மேதினம் தொட்டு இன்றுவரை வெற்றியீட்டியது யார் என்பதைக் காலம் தெளிவாக உணர்த்தும். மனிதர்களை அவர்களின் பேச்சினுல் அல்ல; போதனைகளினுல் அல்ல; செயல்களினுல் தான்தான் மதிப்பிடல் வேண்டும். பட்டங்கள் பெற்ற இடதுசாரித் தலைவர்கள் தொழிலாளரைக் காட்டிக் கொடுத்துள்ளார்கள் என்பது இன்று தொழிலாளர்களுக்குப் புலனுகின்றது. தொழிலாள வர்க்கத்தின் உண்மையான நண்பர்கள் யார்? துரோகிகள் யார்? முதலாளித்துவத்தின் எதிரிகள் யார்? முண்டுகள் யார் என்பதைத் தெளிவு படுத்துவதற்குச் சென்ற காலத்தில் நடைபெற்ற தேசிய சர்வதேசிய சம்பவங்கள் பெருந்துணை புரிந்துள்ளன.

தமிழில்:
எம். ஐ. எம். அன்வர்



# காலனி முறையின் காவலன் குருசோவ்

## கோமாளியின் கொள்கை லுமும்பாவைக் கொன்றது

### போராட்டமே விடுதலை மார்க்கம்

(சென்றவாரத் தொடர்)

அடுத்து குருஷ்சோவ் காலனிஸத்தை ஒழிப்பதற்குக் கொடுக்கும் சிகிச்சை ஆயுத ஒழிப்பாகும். இரண்டாவது சர்வதேசியத்தை சேர்ந்த திரிபுவாதி பர்ன்ஸ்டீனும் ''சர்வதேசிய உடன்படிக்கை, ஆயுத ஒழிப்பு இவற்றின் மூலம் நாடுகள் மத்தியில் சமத்துவ உரிமைகளை'' நிலை நிறுத்த முடியும் என்று கூறினர். திரிபுவாதி காட்ஸ்கியும், ''மேற்கு ஐரோப்பிய நாடுகள் இராணுவ செலவினங்களைக் குறைத்துக் கொள்வதால் சீனு, துருக்கி, தென்-அமெரிக்கா ஆகிய இடங்களில் புகையிரத வீதிகள் போன்ற பொது வேலைகளைச் செய்து தொழில் அபிவிருத்திக்கும் உதவி செய்ய முடியும்'' என்று கூறினர்.

அன்று ஆயுத ஒழிப்பைப் பற்றி விமர்சனம் செய்த போது லெனின் அவர்கள், ''ஆயுத ஒழிப்புக்கான கோரிக்கையின் பிரதான தவறு என்னவெனில், புரட்சியின் ஸ்தூலமான பிரச்சினைகளிலிருந்து நழுவப் பார்ப்பதாகும்: அல்லது ஆயுத ஒழிப்பின் ஆதரவாளர்கள் ஆயுதமற்ற ஒரு புதியவகையான புரட்சிக்காக நிற்கிருர்களா?'' என்று ''யுத்தத் திட்டம்'' என்ற கட்டுரையில் கேட்டிருக்கிருர்.

இப்படி இருக்குப் பொழுது தன்னை லெனினின் வாரிசாகத் தம்பட்டம் அடிக்கும் குருஷ்சோவ் ஆயுதப் புரட்சி பற்றிய லெனினின் கருத்துக்கு முழுக்குப் போட்டுவிட்டார். இன்னும் காலனி நாட்டு மக்கள் விடுதலை பெறுவது ஆயுதஒழிப்பினுல் சாத்தியம் என்ற இரண்டாவது அகிலத் திரிபுவாதிகளின் பிற்போக்குக் கருத்தை திரும்பவும் அரங்கிற்குக் கொண்டுவந்திருக்கிருர்.

''ஆயுத ஒழிப்பு என்பதன் அர்த்தம் யுத்த சக்திகளை நிராயுத பாணிகளாக்குவது, இராணுவ வெறியை அகற்றுவது, இன்னெரு நாட்டின் உள் விவகாரங்களில் ஆயுதத் தலையீடு நிகழ்த்துதை இல்லாமற் செய்வது, எல்லா வடிவங்களிலுமான காலனிஸத்தை முற்று முழுதாகவும், இறுதியாகவும் ஒழித்துக் கட்டுவதாகும்'' என்று குருஷ்சோவ் கூறியுள்ளார்.

அது மாத்திரமல்ல, ''ஆயுத ஒழிப்பு புதிதாக அமையும் நாடுகளுச்கு உதவியளிக்கும் வாய்ப்புகளைப் பெரிதும் அதிகரிக்கச்செய்யும். இராணுவச் செலவினங்களுக்குஆண்டுதோறும் 12,000 கோடி டாலர்களில் 8-10 வீதத்தை ஒதுக்கினுல், அது துன்ப துயரங்களால் வாடும் பிரதேச மக்களின் பசி, நோய், கல்விஇன்மை ஆகியவற்றை 20 ஆண்டுகளுக்குள் ஒழித்துக் கட்ட துணை புரியும்'' என்றும் கூறினுர்.

குருஷ்சோவின் கருத்துப்படி அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளின் மக்கள் காலனிஸ எதிர்ப்பு, விடுதலைப் போராட்டங்களில் ஈடுபடாமல், ஏகாதிபத்திய வாதிகள் கருணை கூர்ந்து, ஆயுத ஒழிப்புக்கு இணங்கும் வரை காத்திருந்தால் போதும்: ஆயுத ஒழிப்பு நிறைவேறியதும் அவர்கள் அடிமை விலங்கை அகற்றி, நேரே கைலாயம் போய் விடலாம் என்பது போலிருக்கிறது. இது முழுக்க முழுக்க திரிபுவாதம், அசல் சந்தர்ப்பவாதம் அன்றி வேறல்ல; இன்னும் ஏகாதிபத்தியத்தையும் பூசி மெழுகுவதாகும்..

## ஏகாதிபத்தியக் கருவி ஐக்கிய நாடுகள் சபை

காலனி ஒழிப்புக்கு குருஷ்சோவ் கூறும் அடுத்த மருந்து, ஐக்கிய நாடுகள் சபை மூலம் அதை நிறைவேற்றுவதாகும்.

''காலனி ஆட்சியை ஒழிப்பதற்கு ஐ. நா. சபையின்றி வேறுயார் வழிகாட்ட முடியும்?'' என்று கேட்கிருர் குருஷ்சோவ்.

இன்று உள்ள ஐ. நா. சபையை எப்படி ஏகாதிபத்தியவாதிகள் கைவசப் படுத்தி இருக்கிருர்களோ, அப்படியே முன்னிருந்த ''லீக் அப் நேஷன்ஷ்'' லும் அவர்கள் ஆதிக்கத்தில் இருந்தது. இதைக் குறிப்பிடு'ம் போது ஸ்டாலின் அவர்கள் ''சந்து செய்ய முடியாதபடி இன்று உலகம் இரண்டு முகாங்களாகப் பிரிந்து இருக்கிறது. ஒன்று ஏகாதிபத்திய முகாம்; மற்றது சோஷலிச முகாம். மரணப் படுக்கையில் இருக்கும் ஏகாதிபத்தியம் ''லீக் அப் நேஷன்ஸ்'' என்ற கடைசித் துரும்பைப் பிடித்து, இதர நாடுகளின் திருடர்களையும் ஒரணியில் சேர்த்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முயற்சிக்கிறது. இது வீண் முயற்சியாகும்; ஏனெனில் காலமும் சூழ் நிலையும் அதற்கு எதிராகவும், சோஷலிஸத்துக்குச் சார்பாகவும் வேலை செய்கின்றன'' என்ருர்.

ஆனல் பழைய திரிபுவாதி காட்ஸ்கி ''லீக் அப் நேஷன்ஸ் ஒன்று இருப்பதே சமாதான லட்சியத்துக்கு ஒரு மகத்தான சாதனையாகும் சமாதானப் பாதுகாப்பிற்கு வேறெந்த ஸ்தாபனமும் அளிக்கமுடியாத நெம்புகோலை இது பிரதிநிதித்துவப் படுத்துகின்றது'' என்று கூறினர்.

இத்துடன் நின்று விடவில்லை அவர். ''இன்று அமெரிக்கா உலகின் மிகப் பலம் வாய்ந்த வல்லரசாகத் திகழ்கிறது. அது 'லீக் அப் நேஷன்'ஸின் உள்ளே, அல்லது அதனேடு சேர்ந்து வேலை செய்தால் யுத்தத்தைத் தடுப்பது சாத்தியம்'' என்றும் கூறினர்.

இன்று குருஷ்சோவும் அமெரிக்கா கைவசப்படுத்தியுள்ள ஐ. நா. வை, உலகின் நாலில் ஒரு பங்கு மக்கள் வாழும் சீனுவை அங்கத்துவ நாடாக இல்லாத ஐ. நா.வை சமாதானத்தின் பிதாவாக வர்ணித்து வருகிருர். இன்று ஐ.நா.வைக் கொண்டு காலனிஸ ஒழிப்பை நிறைவேற்றலாம் என்றும் விளம்பரம் செய்து வருகிருர்.

''இந்த உயர்தர ஐ. நா. சபையிலிருந்து மேலை நாடுகளின் பகுத்தறிவுக்கும், தூர திருஷ்டிக்கும் வேண்டுகோள் விடுக்கிரேம். அவற்றின் அரசாங்கங்களுக்கும், பிரதிநிதிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கிரேம். காலனிஸ ஆட்சியை ஒழிக்கும் நடவடிக்கைக்கு நாம் உடன்பட்டு, வரலாற்றின் இயற்கையான போக்கை துரிதப்படுத்துவோமாக'', என்று ஐ. நா.விலும் பேசினுர்.

ஆனல் ஐ. நா. உண்மையில் சாதித்ததென்ன? பெல்ஜியம் ஏகாதிபத்தியத்திலிருந்து சுதந்திரமடைந்த காங்கோவை அமெரிக்காவின் காலனியாக மாற்ற துணை செய்ததன்றி வேறல்ல.

இதுபற்றிச் சிறிது கண்ணேடிப் பார்ப்பது நல்லது. ''உலக மூலப் பொருள்களின் களஞ்சியம்'' என்று வர்ணிக்கப்படும் காங்கோவில் பெல்ஜியம் தன்னிச்சைப்படி சுரண்டல் நடத்தி வந்தது. இடையில் இங்கிலாந்தும் இதிற் சேர்ந்து கொண்டது. அங்கு எல்லா விதமான ரசாயன மூலப் பொருட்களும், தங்கம், வெள்ளி, உரேனியம் போன்ற உலோகங்களும், பருத்தி, கொக்கோ, கோப்பி, றப்பர் முதலியவையும் ஏராளமாக உண்டு. இது அமெரிக்காவுக்கு கைவசப்படுத்த வேண்டுமென்ற பெரும் பசியைக் கிளப்பி விட்டது. 1960 ஜூன் 30-ல் காங்கோ விடுதலையடைந்தது. ஆனல் ஐந்து நாட்களில் அமெரிக்கா ஒரு குழப்ப நிலையை உண்டாக்கி விட்டு, ஐ. நா. வைத் தலையிடுமாறு தூண்டியது.

**கே.ஏ.சுப்பிரமணியம்**
செயலாளர், யாழ்-பிரதேச கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனம்.

இந்த இடத்தில், அமெரிக்க செனட் வெளிவிவகாரக் கமிட்டி 1959-ல் வெளியிட்ட ஆராய்ச்சி அறிக்கையில் காங்கோவின் கனிப்பொருள்கள் அமெரிக்காவின் தொழில், இராணுவத் தேவைகளுக்கு உதவியாக இருக்கின்றன. எனவே, இந்த சப்ளைகள் தொடர்ந்தும் கிடைப்பதை உத்திரவாதம் செய்யக்கூடிய அளவு எமது எதிர்கால உறவுகள் அமையவேண்டும்'' என்று கூறியிருந்ததை இங்கு நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும்.

கொங்கோ கிளர்ச்சியை அடக்கும் சாக்குப் போக்கில், அமெரிக்கா தனது தேவைக்காக ஐ. நா வைப் பாவித்தது. ஐ. நா மூலம் காலனிஸத்தை ஒழித்துவிடக் கனவு காணும் குருசேவும் அமெரிக்காவுக்கு ஆதரவு அளித்தார். 1960 ஜூலை 13-ந்தேதி நடந்த ஐ. நா. பந்தோபஸ்து கவுன்சிலில் ரஷியா ஐ. நா. படையை காங்கோவுக்கு அனுப்ப வேண்டும் என்று வாக்களித்தது. அது மாத்திரமல்ல: ஜூலை 15-ல் குருசேவ் ''ஐ. நா. பந்தோபஸ்து கவுன்ஸில் பயனுள்ள நடவடிக்கைகையை எடுத்திருக்கிறது'' என்று லுமும்பாவுக்கும் தந்திமூலம் தெரிவித்தார். நடந்தது என்ன?

லுமும்பா கொலைசெய்யப்பட்டார். அவருக்கு பின் வந்த கிஸெங்கா சிறையில் அடைக்கப்பட்டார். காங்கோ ஒநாயின் வாயிலிருந்து தப்பி, புலியிடம் அகப்பட்டுக் கொண்டது. இப்படித்தான் ஐ, நா. மூலம் காலனிசத்தை ஒழித்துக்கட்டும் குருசேவின் கொள்கை முடிவடைந்திருக்கிறது.

இன்னும் மத்திய தரைக் கடலில் வலுவிடம் ஒன்றை அமைக்கக் கனவு கண்டுவந்த அமெரிக்கா சின்னஞ் சிறு சைபீரஸில் துருக்கி, கிரேக்க மக்களுக்கிடையில் இனக்கலவரத்தைத் தூண்டிவிட்டது. (இலங்கை இனக் கலவரத்திலும் அமெரிக்காவின் பங்கு உண்டு என்பது இங்கு சிந்தித்தற்குரியது) இதை, ஜோர்ஜ் போல் என்ற அமெரிக்க துணைக்காரியதரிசி நிக்கோஷியாவுக்குச் சென்று திரும்பியதும், இனக் கலவரம் தீவிரமடைந்தது நிரூபிக்கின்றது. அத்துடன் அமெரிக்காவும், பிரிட்டனும் ''சமாதான பாதுகாப்புக்கான படைகளை'' அனுப்புவதை ஜனதிபதி மக்காரியோஸ் நிராகரித்து விட்டார். மேற்படி சைபிரஸ் பிரச்சினை ஐ. நாவுக்கு கொண்டுவரப்பட்டது. ஐ. நா. படைகள் சைபிரஸுக்கு அனுப்பும் தீர்மானம் வந்த போது ரஷ்யா தனது ரத்துரிமையைப் பாவிக்கத் தவறிவிட்டது, இது அமெரிக்காவுக்கு குருஷ்சேவ் செய்த 2-வது உதவி. முன்பு காங்கோவில், இன்று சைபிரஸில். எனவே, அமெரிக்காவின் புதிய காலனியான இந்தியாவின் ஜியானியை ஐ. நா. படைத் தளபதியாக அமெரிக்கா அனுப்பியிருக்கின்றது. காங்கோவிலும் இந்தியப் படைகள் அமெரிக்காவுக்கு உதவிசெய்ததை நாம் மறந்துவிடக்கூடாது, இது ஐ. நா. மூலம் காலனிகளை ஒழிப்பதா? அல்லது அமெரிக்காவுக்குப் புதிய காலனிகளைப் படைப்பதா? என்று சிந்திக்க வேண்டிய ஒரு நெருக்கடியான கட்டம் இன்று வந்துவிட்டது. இங்கு அங்கோலா விடுதலைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் மரியோ டீ அன்ட்ரோடே அவர்கள் கூறியதை நினைவூட்டுவோமாக!

''எந்த அரசியல் உரிமைகளைச் சமாதான வழிகளில் பெறப் பாடுபட்டுத் தோல்வி கண்டோமோ, அந்த உரிமைகளைப் பெற இன்று போராட்டம் தொடுத்திருக்கிரேம். சுதந்திரத்தை நிராகரித்து அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டதுதான் எமது சமாதானக் கோரிக்கைகளுக்கு சலஸார் ஆட்சி தந்த பரிசு. இது அங்கோலா மக்களை ஆயுதம் தாங்கிப் போராட நிர்ப்பந்தித்துள்ளது'' என்று கூறினுர்.



யாழ்-மேதினப் பொதுக் கூட்டத்தில் பீடித் தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் எஸ். ராஜா பேசிக்கொண்டிருக்கிருர்.

**மே தினம்** சம்பந்தமான

★ ஊர்வலம், பொதுக்கூட்ட படங்களை ★

**''அசோகா போட்டோ''**

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

என்ற இடத்திலும்

★ மேதின ஊர்வல படங்களை ★

**''சித்திராலயா''**

போட்டோ கிருபேஸ், ஸ்டான்லி ரேட் யாழ்ப்பாணம்

என்ற இடத்திலும் தேவையானேர் பெற்றுக்கொள்ளலாம்.

★ பதுளை வாலிபர் கருத்தரங்க மலர் ★

# போராட்ட பாதையில் வாலிபர்

கடந்த பிப்ரவரி மாதம் சரித்திரப் பிரசித்தி பெற்ற அனுரதபுர நகரில் நமது கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்ளேனம் நடத்திய ''கருத்தரங்க மாநாடு'' ஈழத்திருநாட்டின் கம்யூனிஸ்ட் எண்ணங் கொண்ட வாலிபர்களிடையிலும் மற்றும் தேசிய ரீதியாயுள்ள முற்போக்கு எண்ணங்கொண்ட வாலிபர்கள் இடையிலும் ஒரு தேசிய புத்துணர்ச்சியையும் அரசியல் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியது. மாநாட்டின் மூலம் பெற்ற கருத்துத் தெளிவை ஆதர்சமாக்கிக் கொண்டு வெளிவந்த வாலிபர் புதிய தெம்புடன் செயல்பட ஆரம்பித்தனர். வடக்கே எழுச்சி கொண்ட தமிழ் வாலிபர்கள், இமயமலையென தம்மை நினைத்துக் கொண்டிருந்த திரிபுவாதத் தலைவர்களை இடி கலங்கச் செய்து விட்டனர். தெற்கே காலியில் மெண்டிஸ் கோட்டையென நினைத்துக்கொண்டிருந்தவர்களின் வயிற்றில் புளியைக் கரைத்து விட்டனர் காலிப்பிரதேச வாலிபர்கள். நாடு பூராவிலுமுள்ள வாலிபர்கள் புதுப் புது வாலிபர் சங்கங்களை ஆரப்பித்ததோடு புதிய முறையிலும் செயல்பட ஆரம்பித்தனர். ஆகவே அநுரதபுரியில் கருத்தரங்க மாநாட்டிலிருந்து கிடைத்த ஆக்கபூர்வமான அனுபவங்களை மேலும் செழுமைப் படுத்தும் எண்ணத்துடன் பதுளை கருத்தரங்க மாநாட்டிற்குக் காலடி எடுத்து வைக்கிறோம்.

## நாமிருக்கும் நாடு

ஈழத்திரு நாடு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மை வாய்ந்தசரித்திரத்தைக்கொண்டநாடு. சரித்திரப் பிரசித்தி அடைந்துள்ள நகரங்களில் அநுராத புரியும் ஒன்று. ஆகவே நமது ஆரம்ப மாநாடு அநுரதபுரியில் ஆரம்பித்தது சாலச் சிறந்தது. இன்று நாம் பதுளையில் நமது இரண்டாவது கருத்தரங்க மாநாட்டை ஆரம்பித்து வைக்கிறோம். பதுளை ஊவா மாகாணத்தின் தலைநகராகும். நமது தாய் நாட்டின் சரித்திரத்தில் ஆங்கிலேயர்களின் ஆட்சியை எதிர்த்து ஆயுதமேந்திப் போராடிய சரித்திரம் ஊவா மாகாணத்தின் உத்தம புதல்வர்களுக்குத்தான் உண்டு. கெப்பெட்டிப்பொல போன்ற வீர சிங்கங்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தேசிய விடுதலைப் போராட்டம் இன்னும் பூரணமடையவில்லை. ''பொருளாதார ரீதியிலும், கலாச்சார ரீதியிலும்'' பிரிட்டிஷ் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் ஆங்கிலேய கொள்ளையர்களையும் எதிர்த்து நின்று தலை வணங்காது போராடுவதற்கு ஊவா மாகாணத்தில் சத்திய பிரமாணம் செய்து கொள்வதற்குத்தான் வாலிபர் சங்க சம்மேளனம் இந்த இரண்டாவது கருத்தரங்க மாநாட்டிற்குப் பதுளையைத் தேர்ந்தெடுத்தது.

மேலும் இத்தகைய முறையில் பிரதேச வாரியாக மாநாட்டைப் பரவலாக நடத்துவதன் மூலம் நமது தாய் நாட்டையும் அதன் சரித்திரத்தையும் நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. அத்துடன் எமது நாட்டிலுள்ள கிராமிய மக்களது வாழ்வு நிலையை யதார்த்த பூர்வமாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. கிராமிய வாலிபர்களோடு தொடர்பு ஏற்படுவதுடன் அவர்களது தேவையென்ன என்பதையும் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. நமக்குள்ளாகவே கருத்துப் பரிமாறலை ஏற்படுத்தி நமது நேச உணர்வையும் தோழமை பாசத்தையும் வளர்த்துக்கொள்ள முடிகிறது. ஆகவே நாட்டையும், மக்களையும் மேலும் மேலும் நேசிப்பதற்கு வழி வகை செய்கிறது.

## கருத்தரங்கத்தின் முக்கியத்துவம்

கடந்த 30 வருட காலமாக இடதுசாரி இயக்கத்தில் தலைமை வகித்து வந்த கிழடுதட்டிய தலைவர்கள் இடதுசாரி இயக்கத்திற்கு ''பாராளுமன்ற பாரிச வியாதியை''யை ஏற்படுத்தி வைத்துவிட்டு பதுங்கியிருந்தனர். இப்பொழுது இவர்கள் பதவி வேட்டையில் இறங்கியுள்ளனர். ஆகவே ஈழத்திரு நாட்டின் அரசியல் சரித்திரத்தில் ஒரு கல்லைத்தாண்டும் இன்றைய கால கட்டத்தில், மக்கள் சிந்தனையில் இருள் பரப்பும்பாதகர்களை மேலும் பார்த்துப் பொறுத்துக் கொண்டேயிருப்பதா? அல்லது புதிய ஒளிபரப்பி புத்துலகைச் சிருஷ்டி செய்ய முயலுவதா? என்பதைத் தீர்மானமாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

தேசிய விடுதலை போராட்டத்தின் முடிவு மந்திரிப் பதவியில் அமருவதுடன் நின்றுவிடுவதொன்றல்ல; அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் அன்னிய ஆக்கிரமிப்பிற்குஉட்பட்டிருக்கும் நாட்டை விடுவித்து, சுதந்திர சுயேச்சையான நிலைக்குக் கொண்டு வந்து மக்களின் வாழ்வில் சுபீட்சத்தை ஏற்படுத்துவதுதான் தேசியவிடுதலைப் போராட்டத்தின் முடிவு கட்டமாகும். ஆனல் இதற்கு நேர் மாறுக இன்று கட்சிகளும், தலைவர்களும் கூட்டு பேரம் பேசுகிறார்கள். ஆகவே இவர்கள் மக்களையும் நாட்டையும் காட்டிக்கொடுத்துவிட்டு தங்களது சுகபோக வாழ்வை மனதில் இருத்திக்கொண்டு சரணடைந்து விட்டார்கள். இத்துடன் இவர்களது அரசியல் நாடகத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கப் பட்டு விட்டது.

**டபிள்யு. ஏ. தர்மதாஸ**

செயலாளர், இலங்கை கம். மற்றும் முற்போக்கு வாலிபர் சம்மேளனம்.

1956-ல் ஏற்பட்ட வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், அதன் சார்புள்ள தேசிய முதலாளித்துவமும் பின்வாங்குவதுடன், தேசிய பிரச்சினைகளையும் குளறுபடியாக்கி வைத்துவிட்டது. பிற்போக்கு ஏகபோக முதலாளித்துவ அரசியல் கட்சியான யூ.என்.பி.யும் ஏகாதிபத்தியமும் இந்தப் பலஹீனத்திலிருந்து நாட்டு மக்கள்கவனத்தைத்திசை திருப்ப முயலுவதோடு, மறுபுறத்தில் சதிகாரச் செயலிலும்ஈடுபட்டு வந்துள்ளது. தொடர்ந்து முயலுகிறது. யூ.என்.பி.யும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கும், விலைவாசி ஏற்றத்திற்கும் ஸ்தாபன ரீதியாகத் திரண்டு போராடிவரும் தொழிலாளர்களின் மேல் பழியைச் சுமத்தி வருகிறது. இந்த நேரத்தில் தான் அடிப்படைக் கொள்கையில்லாத ஐக்கிய முன்னணி சுடுகாட்டுப் பாதையை நோக்கி முன்னேறுகிறது. இத்தகையதொரு அரசியல் சூழ்நிலையை முன்வைத்துத்தான் நாம் இரண்டாவதாக பதுளையில் கூடி நமது கருத்தரங்கை நடத்துவதற்கு முன் வந்துள்ளோம்.

பதுளை ''கருத்தரங்க மாநாடு'' கீழ்க்காணும் விஷயங்களை விவாதித்து அரசியல் தெளிவு பெறுவதன் மூலம் தான் வாலிபர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது. முப்பது வருடமாக இடதுசாரி இயக்கத்தில் ஆழ்ந்த நம்பிக்கையையும் விசுவாசத்தையும் கொண்ட இலட்சக்கணக்கான முற்போக்காளர்களையும், நாட்டின் மேல் நல்லெண்ணங்கொண்ட தேசாபிமானிகளையும் நடுவனந்திரத்தில் விட்டு விட்டு துரோகத் தனம் செய்தமையால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையைப் போக்கி முற்போக்கு இயக்கத்தின் மேல் நம்பிக்கையை ஏற்படுத்தல் வேண்டும். நமக்கு முன்னுள்ள அரசியல் பிரச்சினைகளை விவாதித்து தெளிவு பெறுதல் வேண்டும். அதை செயல்படுத்தல் வேண்டும். இயற்கையாகவே வாலிபர்களிடையிலுள்ள புரட்சிகர குணும்சத்தை வளர்த்தெடுத்து தேசாபிமான உணர்வை ஊட்டி ஒரே அணியில் ஈழத்து வாலிபர்களைத் திரட்டுதல் அவசியம். முற்போக்கு இயக்கத்திற்கு புதிய இரத்தம் பாய்ச்சி புதிய தலைமையை சிருஷ்டித்து புதிய ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கு பதுளை மாநாடு நல்ல வழி காட்டியாக அமைய வேண்டும்.

# புதிய பரம்பரையைச் சிருஷ்டிக்கும் பணி கம்யூனிஸ்ட் வாலிபர் கடமை

**நாம்** வாழும் சமூகத்தில் ஒருசாரரார் இந்திரலோக சுகமனுபவிப்பதையும் மற்றுமொறுசாரரார்—பெரும்பான்மையோர் வறுமையில் வாடி வதங்குவதையும்வாலிபர்களாகிய நாம் காண்கிறோம். மாடமாளிகைகளில் இசையின் இன்ப கீதங்களையும், குடிசைகளில் மரண ஓலங்களையும் நாம் கேட்கின்றோம். வயிறு புடைத்து வாழும் கூட்டத்தையும், குடலைக் காயப் போட்டு மாளும் பெருங் கூட்டத்தையும் நாம் பார்க்கின்றோம். படாடோபமாக உடையணிவதையும் அவசிய உடையின்றித் தவிக்கும் மக்களையும் நாம் எமது அன்றாட வாழ்வில் சந்திக்கின்றோம். இவைகளை நேருக்கு நேராக நடைபாதைகளில் சிற்சில சமயங்களில் காண்கின்ற தூய உள்ளம்படைத்த வாலிப இதயங்கள் வேதனையுறுகின்றன. அனுதாபப்படுகின்றன. மேலும் பரிதாபத்தின் உச்ச கட்டத்தில் கையில் உள்ள துட்டுக்காசைக் கொடுத்து மனச்சாந்தி பெறுகின்றன. ஆனல் இதைவிட வேறு வழி தெரியாமல் இந் நிலைமைகளைப் பின்னர் மறந்துவிடுகின்றனர்.

இயற்கையாகவே இதய சுத்தியும் மனித நேர்மையும் கொண்ட வாலிபர்கள் இந்த மனித சமூகத்தின் இரு பிரிவுகளையும் பார்த்துச் சிந்திக்கத் தொடங்குகின்றனர். இந்த நேரத்தில்தான் மதம் ''பாவ கர்மங்களையும்'' முன்னேர் தீவினையையும், போன ஜென்மத்தின் கணக்கு வழக்குகளையும் முன்வைத்து வாலிபனின் சிந்தனையைச் சீரழித்துச் சிதறடிக்கின்றது.

உளுத்துப்போய் நாசமடைந்து மனிதனை மனிதன் சுரண்டி, ஈவிரக்கமற்ற காட்டுமிராண்டித்தன வாழ்வு நடத்தி, மக்களை மாக்களாக மதித்து நடத்தும் இன்றைய சமூகத்தை, மதாச்சாரியார்கள் கடவுளின் பெயர்களால் புத்தர், யேசு, நபி நாயகம் போன்றவர்களின் பெயர்களால், அவர்களின் போதனைகளைத் திரித்தும் குறைத்தும் கூறி, சமூகத்தின் சுரண்டல்காரர்களை, மக்களை அடக்கி ஆளுபவர்களைப் பாதுகாத்து வருகின்றனர். ஆகவே சமூகத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கும் வாலிபனை மதங்கள் சீரழித்து வருகின்ற சரித்திரத்தைத்தான் நாம் காண முடிந்துள்ளது.

இன்றைய சமூகமும் அதற்குத் துணையாக நிற்கும் மதங்களும் மாய எண்ணங்களை அவர்களது சிந்தனையில் தூவி விடுகின்றது. மந்திரஜாலக் கதைகளை எழுதித் தள்ளுகின்றது. மொத்தத்தில் வறுமைப் பெருக்கி மக்கள் வாழ்வைச் சீரழித்து, தாழ்ந்த—கீழ்த்தர நிலையில் காம உணர்வை வளர்த்து வாலிபர்களின் சுய சிந்தனையை மழுங்கடித்து சமூகத்தின் பொறுப்பற்ற ஒரு மனிதனுக ஆக்கி விடுகிறது. ஆகவே கம்யூனிஸ்டு வாலிபர்களாகிய நமக்கு இரண்டுவிதக் கடமைகளைச் செய்யும் பொறுப்பு உள்ளது. பொருளாதார ரீதியில் சீர்கெட்டு, வகுப்புவாத சாக்கடையில் நாற்றமெடுத்து அழுகி நாசமாகிக் கொண்டிருக்கும் இன்றைய சமூகத்தின் ஆணிவேரையே வெட்டி வீழ்த்திவிட்டு, ஒரு புதிய பரம்பரையை — புதிய சிந்தனையை சிருஷ்டிக்கும் ஒரு புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தும் தொழிலாளப்வர்க்க போராட்ட அணியில் சமூகத்தின் முதுகெலும்பான வாலிப சக்திகளை ஒன்று திரட்டுவது நமது முதல் பணி.

இரண்டாவதாக, அஞ்ஞான இருளில் இருந்துகொண்டு வழி தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் எண்ணற்ற ஆயிரக்கணக்கான—லட்சக் கணக்கான வாலிபர்களுக்கு மெஞ்ஞான ஒளி பரப்பி அவர்களது சிந்தனையில் துருப்பிடித்திருக்கும் தலைவிதி வேதாந்தங்களையும் பாவத்தைத் தீர்க்க புண்ணியத்திற்கு விலை பேசுவதையும், அடுத்த ஜென்மத்திற்கு கணக்கு வழக்குப் பார்க்கும் சுடுகாட்டுப் போதனைகளையும் தட்டித் தட்டித் தகர்க்க வேண்டும்.

**–அ. மரியதாஸ்**

★ தரமான தாள்கள்

★ அச்சுக்கு நேர்த்தியானவை

★ பத்திரிகைகள், புத்தகங்கள், பிரசுரங்கள் அச்சடிக்க சிறந்த தாள்கள்

உடனடியாக விண்ணப்பியுங்கள்:

இலங்கை டிரேட் எக்ஸசேஞ்

மெர்க்கண்டைல் ஹவுஸ், 56/6, ராணி வீதி, கோட்டை.

# பதுளை கருத்தரங்கத்தின் பணிகள்

**1964**-மே 15,16,17ம் திகதிகளில் ஊவா மாகாணத்தில் நடைபெறப் போகும் வாலிபர் சங்க மாநாடு பிப்ரவரி மாதம் அநுராத புரியில் நடைபெற்ற கருத்தரங்க மாநாட்டிலிருந்து கிடைத்த அனுபவ பூர்வமான பாடங்களிலிருந்து முன்னேக்கிச் செல்லும் ஒரு அடியாகும். இத்தகைய மாநாடுகள் நடப்பது முதல் முறை ஆகையால்அன்று ம்மாநாட்டில் ஏற்பட்ட பல குறைகளை நாம் ஏற்றுக் கொண்டு அத்தகைய அனுபவத்திலிருந்து கிடைக்கப்பெற்ற பாடங்களை எடுத்துக் கொண்டு பதுளை மாநாட்டை வெற்றிகரமாக்க முயலுவோம். அத்துடன் முதல் மாநாட்டில் ஏற்பட்ட குறைகளை கூடுமான வரை இதில் குறைத்துக் கொள்வதற்கு வழிவகையேற்படுமானல் அதுவே நமது வெற்றிக்கு அறிகுறியாகும்.

## நமது கொள்கை என்ன?

இத்தகைய கருத்தரங்கங்கள் ஏற்படுத்துவதின் முக்கிய நோக்கம் என்ன என்பது பற்றி சரியாக நாம் தெளிவு பெருவிடில் இத்தகைய மாநாடுகள் மூலமாக சரியான-பூரணமான பிரயோசனத்தை நம்மால் பெற முடியாமல் போகும்.

கொத்தலாவலை ஆட்சி நடத்திய காலத்தில் மாத்தளைப் பகுதியிலுள்ள தேசிய வீரர்களின் ஞாபகார்த்தமாகவுள்ள சின்னங்களை அகற்றுவதற்கு எடுத்த முயற்சிக்கு எதிராக நாம் போராடினேம். தென்-கிழக்கு ஆசியாவின் யுத்தக் கூட்டணியில் இலங்கையைச் சேர்த்துக் கொள்ளுமுகமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அன்று உப-ஜனதிபதியாயிருந்த ரிச்சாட் நிக்சன் இங்கு விஜயம் செய்த பொழுது எமது கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்து ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்களை நாம் நடத்தினேம். இத்தகைய தேசிய சர்வதேசியக் கடமைகளை நிறைவேற்றிய எமது சம்மேளனம், நாடு பூராவிலுமுள்ள வாலிபர்களை ஒரே இடத்தில் ஒன்றுதிரட்டி மூன்று மாதத்திற்கு ஒரு தடவை இத்தகைய கருத்தரங்க அபிப்பிராயங்களை பரிமாறிக் கொள்ள முயற்சி செய்வது பல நோக்கங்களை முன்வைத்தேயாகும்.

பெயரளவில் வாலிபர்களை வைத்துக் கொண்டிருந்த, திரிபுவாதத்துரோகிகளிடமிருந்து வாலிபர் அணியை பாதுகாத்துக் கொண்டதற்குப் பிறகு, இதுவரையிலும் நமக்கிருந்த பல தடைகளைத் தகர்த்தெறிந்து விட்டு முன்னேக்கிச் செல்லுவதற்கான வழி வகைகள் உண்டென்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அசமந்தப் போக்குகளையும், சோம்பல் குணங்களையும் களைந்தெறிந்து விட்டு, மக்கள் மத்தியில்தொண்டாற்றவேண்டுமாயின், நமது நாட்டைப் பற்றியும் சரிவரத் தெரிந்து கொள்ள வேண்டும்.

## நாட்டின்சரித்திரம்

ஏகாதிபத்திய கல்விமுறையில் அடிமைப்பட்டுக் கிடக்கும் நமது நாடு, எமது மூதாதையர்களின் வாழ்வைப் பற்றியும், நாட்டின் விடுதலைக்காக நடத்திய போராட்ட சரித்திரங்களைப் பற்றியும், மூடி மறைத்துவிட்டு, பிரித்தானிய ராசாக்களுடைய சரித்திரத்தையும், அவர்களது ஆசை நாயகிகளைப் பற்றியும், அவர்களது கடல் கொள்ளைகளின் வீர வரலாறுகளையும்தான் கற்க வேண்டியிருக்கிறது.

நாட்டைக்கோழைத் தனத்திற்குட்படுத்தும் நாசகார எண்ணங்களால் மோசமாகிய அச் சரித்திரத்திற்குப் பதிலாக, எமது தேசாபிமான வீரர்களது, வெள்ளையர்களது துப்பாக்கிக்குப் பலியான அந்த உத்தமர்களது வீர போராட்டங்களும், காவியங்களும் எமது வாலிபர்களுக்குப் பாடமாக அமைய வழி வகுப்பதுதான் நமது முதல் நோக்கமாகும்.

அத்துடன்கடந்தகாலஅனுபவங்களின் மூலம் சிறந்த பாடங்களைக் கற்றுக் கொண்டு எதிர் காலத்தில் எமது மரகத மணித்திரு நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்கு, உலகில் மூன்றில் ஒரு பகுதியில் சுபீட்சத்தை ஏற்படுத்தி வைத்து, மக்களை கோழைத் தனத்திலிருந்து விடுவித்த மங்காத மாக்சிஸஇலட்சியத்தைஅந்தமக்கள் தத்துவமானமாக்சிஸ-லெனினிசத்தின் அடிப்படை உண்மையை வாலிபர்களின் முன் வைப்பதுதான் இந்த மாநாட்டின் மற்றுமொரு இலட்சியமாகும்.

---

**பதுளை வாலிபர் கருத்தரங்க மாநாடு**

மே 15, 16, 17-ம் திகதிகளில்
விசாகா வித்தியாலயத்தில் நடைபெறும்
17-5-64 ஞாயிற்றுக் கிழமை மாலை

**மாபெரும் பொதுக்கூட்டம்**

சேனநாயகா மைதானத்தில் நடைபெறும்

தலைவர்: **ஜஸ்டின் சூரியாராய்ச்சி**

பேச்சாளர்கள்: தோழர்கள் நா. சண்முகதாசன், பிரேமலால் குமாரசிரி, டி. கே. டி, ஜினேந்திரபால, எச். பி. அமரபாலா, டபிள்யு. ஏ. தர்மதாச, அருணேலிஸ் சில்வா, அ. ராமநாதன், என், எல். பெரேரா, ஐ. கருணரத்ன மற்றும் பலர்.

ஊர்வலம் மாலை 3-30-க்கு
விசாகா வித்தியாலயத்திலிருந்து புறப்படும்

9. டி மெல் வீதி, கொழும்பு-2

இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சம்மேளனம்

---

● 1-ம் பக்கத் தொடர்


தெனவும் நாம் கூறியது சரியா? தப்பா? கொள்கை அடிப்படையில் உள்ள கருத்து வேற்றுமைகளை விவாதித்து பொது நோக்கம் கொண்ட புரட்சி முன்னணியாக இடதுசாரி ஐக்கிய முன்னணியை விருத்தியடையச் செய்தல் வேண்டுமெனவும், அவ்விதமே முன்னணியைக் காப்பாற்ற முடியுமெனவும் நாம் கூறியது சரியா? தப்பா?

எதிர்கால வளர்ச்சிகளைக் கணிக்கும் தன்மை மாக்சிஸ-லெனினிஸத்தின் சிறப்பு அம்சமாகும். மாக்சிஸ-லெனினிஸ வாதிகளாகிய நாம் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை அவதானித்து அவற்றினைத் தடுக்கப் போராட ஆரம்பித்தோம். எங்களை ஐக்கிய விரோதிகள் எனக் குற்றஞ் சாட்டினர். ஆனலும் எமது சரியான போராட்டத்தினல் நாம் எமது கட்சியைக் காப்பாற்றினேம்.

ஆனல் தலையில் இடிவிழுமட்டும் பொறுத்திருக்கும் மற்றைய கட்சிகளில் இப்போராட்டம் இலேசானதல்ல. எப்படியிருந்தாலும் இடதுசாரி ஐக்கிய முன்னணியில் உள்ளவர்களும் மற்றவர்களும் இப்பொழுது எம்மீது குறை கூற முடியுமா? எமது கூற்றுக்கள் சரியென்பது இன்று சந்தேகமின்றி நிரூபிக்கப்பட்டு விட்டது.

---

# தூக்கி எறி!



டபிள்யு. ஏ. தர்மதாஸ
வாலிபர் சம்மேளன
பொதுச்செயலாளர்

**போ**ர்த்துக்கேய, டச்சு, பிரிட்டிஷ் ஆகிய பலம் வாய்ந்த ஏகாதிபத்தியங்களின் பலதரப்பட்ட ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக 277 வருடங்களாக நிர்ப்பயமின்றி வீராவேசத்துடன் தைரியமாகப் போராடிய இலங்கையைப் போன்ற மிகச் சிறிய தீவிலுள்ள சிங்கள மக்களைப்போல் ஒரு வீரமிகு இனத்தை வேறெங்கும் காணுவது புதுமையிலும்புதுமையே.

அத்தகைய தேசிய விடுதலைப் போராட்டத்தில் 277 வருடங்களாக தங்களது தாய் நாட்டின் நிமித்தம், தேசாபிமான செங்குருதி மூலம் தோய்த்தெடுத்து, தாய் நாட்டின் பூமியை புனிதமாக்கியவர்கள் எண்ணற்ற ஆயிரக்கணக்கானவர்களாகும்.

ஒருதுளி இரத்தமாவது சிந்தாமல் நாட்டை விடுவித்தோம் என்று கூறி எமது தேசாபிமானிகளுக்கு அவமானத்தைத் தேடித்தந்துகொண்டிருக்கும் ஏகாதிபத்தியகைக் கூலிகளுக்கும் திரிபுவாத அயோக்கியர்க்ளுக்கும் இவர்களது பரம்பரையினர்களுக்கும்கூட தேசாபிமானிகளின் சாபம் பட்டேதீரும்.

தேசிய சுயாதீனத்திற்காக மலைநாட்டிலுள்ள சிங்களவர்களை ஒன்றுதிரட்டி அவர்களுக்குத் தேசாபிமானஉணர்வூட்டி எழுச்சிகொள்ளச் செய்து வெள்ளையர்களுக்கு விரோதமாக 1817-ம் வருடம் ஊவா மாகாணம் நடத்திய பிரமாண்டமானபோராட்டம் வெள்ளையர்களின் அடித்தளத்தையே கதிகலங்கச் செய்துவிட்டது. அவ் விடுதலைப் போராட்ட நாயகனை தேசிய வீரன் கெப்பட்டிபொலவின் தேசாபிமானப் படையைஎதிர்த்த ஊவா மாகாண அரசாங்க ஏஜண்டான வெள்ளையன் டக்ளஸ் வில்சனை 1817-ம் வருடம் செப்டம்பர் 17-ந் திகதி தன் வில்லம்பு ஆயுதத்தால் சரியாகக் குறிபார்த்து மரணமடையச் செய்த தேசிய வீரன் 'கொஹு-கும்புரேரா'வை வெறும்வேடன் என்றபெயர்சூட்டி தேசாபிமானியை அவமானப் படுத்தும் நோக்குடன்; டக்ளஸ் வில்சனின் ஞாபகார்த்தமாக பிபிலே ரோட்டில் லேக்கும்வுரோவில் வைக்கப் பட்டிருக்கும் ஞாபகார்த்த ஸ்தம்பத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது எம்மையே அவமானப்படுத்துவதாகும்.

இந்த அவமானத்தை தூக்கி எறிந்து துவம்சம் செய்வது சகல தேசாபிமானிகளினதும் கடமையாகும்.

---

பதிப்பித்து வெளியிடுபவர்: அசன் மொகிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 9, டிமெல் வீதி கொழும்பு-2.

---


# இலங்கை மாக்சிஸ போதனைக் குழு

இலங்கை மாக்சிஸ போதனைக் குழு மாக்சிஸ சொற்பொழிவுத் தொடர் ஒன்றை ஒழுங்குபடுத்துகின்றது.

சொற்பொழிவு விபரம் விரைவில் அறிவிக்கப்படும்.

மாக்சிஸ அறிவுபெற விரும்புபவர்கள் அனை வரும் குழுவில் அங்கத்தவர்களாகச் சேர்ந்துகொள்ள முடியும்.

**அங்கத்துவ சந்தா மாதம் 25 சதம்**

சகல விசாரணைகளும், விண்ணப்பப் பத்திரங்களும் கூட்டுக் காரியதரிசிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

123, யூனியன் பிளேஸ்.
கொழும்பு-2

கே. பிரான்ஸிஸ் பெரேரா
ஈ. தி. மூர்த்தி
கூட்டுக் காரியதரிசிகள்



**ஒவ்வொரு புரட்சிவாதியும் தவருது வாசிக்க வேண்டிய சஞ்சிகை**

# கம்யூனிஸ்ட்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தத்துவ சஞ்சிகை

ஆசிரியர்: **நா. சண்முகதாசன்**

1964, மே, இதழ்!

- ★ சமாதானமா, பலாத்காரமா?
- ● சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தின் இன்றைய நிலைமை
- ★ ஜனநாயக சோஷலிஸமா, விஞ்ஞான சோஷலிஸமா?
- ● ஏழாவது மாநாட்டின் அறைகூவல்.

வெளியீடு:

**இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி**
123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2




# பொங்கியெழும் வாலிபர்களே போராட வாரீர்!